Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

ஆசியாவின் நம்பர் 1 சீமேந்து
SLS 107 அங்கீகாரம் பெற்றது.
ISO 9002 தரம் பெற்றது.
BSS 12 - 1991 தரத்திற்கு அமைவானது.
இவை அனைத்தையும் கொண்ட உயர்தர சீமேந்து.
ரா ம் கோ ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
சீமேந்து
(சி-485)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 தை 14 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 துல்கஃதா 24 (28.01.2003) செவ்வாய்க்கிழமை இதழ் : 119

## புலிகள் சிறார்களை இணைப்பதை தடுக்க இராணுவத்துக்கு பணிப்பு!

### ஜனாதிபதி சந்திரிகா நேற்று விடுத்தார்

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் தமது இயக்கத்துக்கு சிறுவர்களைப் பலவந்தமாக இணைத்துக்கொள்ள மேற்கொண்டு வரும் முயற்சிகளை உடனடியாகத் தடுத்துநிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, இராணுவத்தளபதி மற்றும் பொலிஸ் மா அதிபர் ஆகியோருக்கு உத்தரவிட்டுள்ளார்.

சிறுவர்களை இயக்கத்தில் சேர்த்துக்கொள்வதன் மூலம், அரசுடன் செய்துகொண்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தை விடுதலைப் புலிகள் மீறி வருவதாக, இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் லயனல் பலகல்ல, பொலிஸ் மா அதிபர் ஈ.ஆனந்தராஜா ஆகியோருக்கு அவர் அனுப்பிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இந்த விடயம் உள்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுசெல்லப்பட்டு இருப்பதாகவும் ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## உலகக் கிண்ண கிரிக்கெட் கனடா அணியில் தமிழர்



சஞ்சயன்

அடுத்தமாதம் ஆரம்பமாகவுள்ள உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் கலந்துகொள்ளவிருக்கும் கனடா நாட்டு அணியில் இலங்கைத் தமிழர் ஒருவரும் இடம்பெற்றுள்ளார்.

சஞ்சயன் துரைசிங்கம் என்ற, கொழும்பை பிறப்பிடமாகக் கொண்ட தமிழரே கனடா கிரிக்கெட் அணியில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறார்.

1969 இல் பிறந்த இவர், கனடா கிரிக்கெட் அணியில் மிதவேகப் பந்துவீச்சாளரும் சிறந்த துடுப்பாட்ட வீரருமாவார். 2001 ஆம் ஆண்டு நடந்த ஐ.சி.சி. கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் கனடா அணியின் சார்பில் இவர் அதிகூடிய விக்கெட்டுக்களைக் கைப் பற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# போர் பாதித்த சிறார்களை மேம்படுத்த புலிகள் - யுனிசெப் புதிய செயற்திட்டம்!

## மிகவிரைவில் நடைமுறைக்கு வருகிறது

(நமது நிருபர்)

**இலங்கையின் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் 19 வருடகால யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சிறுவர்களை மேம்படுத்துவதற்கான விசேட செயற்பாட்டுத் திட்டமொன்றை, விடுதலைப் புலிகளும் ஐ.நா. சிறுவர் பாதுகாப்பு அமைப்பான யுனிசெப்பும் இணைந்து நடைமுறைப்படுத்தவுள்ளதாக யுனிசெப் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.**

மிகவிரைவில் நடைமுறைப்படுத்தப்படவிருக்கும் இந்த விசேட செயற்திட்டத்தின்படி, குழந்தைத் தொழிலாளர்களாக இருக்கின்ற சிறார்களையும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சிறுவர்களையும் முன்னேற்றுவதற்கான விசேட திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும் யுனிசெப் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இதன்மூலம் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் வாழ்க்கையை இயல்பு நிலைக்கு மீண்டும் கொண்டுவர முடியும் என புலிகளும் யுனிசெப்பும

(10 ஆம் பக்கம் பார்க்க)

உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003

உள்ளே!

நமது ஈழநாட்டின் சிறப்புப் பக்கம் இன்று முதல் ஆரம்பமாகிறது.

அலசவும் ஆவணப்படுத்தவும் ஓர் அட்டகாசமான தொகுப்பு.



உங்கள் பிரதிகளுக்கு முந்திக்கொள்ளுங்கள்.

## புலிகளுடன் இணையச் சென்ற மூன்று சிறுவர்கள் ஒப்படைப்பு!

திருகோணமலையில் நேற்றுமுன்தினம் விடுதலைப் புலிகளுடன் இணைந்துகொள்ளச்சென்ற மூன்று சிறுவர்கள், நேற்றுமாலை யுனிசெப் பிரதிநிதி கபிரியேலா எல்ரோய முன்னிலையில் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இவர்கள் திருமலை மாவட்டம் வீரன்சோலைக் கிராமத்தைச் சேர்ந்தவர்களாவர். திருகோணமலை நகர அரசியற்துறைப் பொறுப்பாளர் மதி, இச்சிறுவர்களை பெற்றோரிடம் ஒப்படைத்தார். இந்நிகழ்வில் கலந்து கொண்ட யுனிசெப்பின் திருகோணமலை மாவட்டப் பிரதிநிதி கபிரியேலா எல்ரோய், சிறுவர் ஒப்படைப்பில் யுனிசெப் மத்தியஸ்தம் வகித்துள்ளதாகத் தெரிவித்தார்.(05)

## வவுனியாவில் அதிரடிப்படையினர் பெண் மீது வல்லுறவு முயற்சி!

### அயலவர்கள் கூடியதும் தப்பியோடினர்

(வவுனியா நிருபர்)

வவுனியா - கணேசபுரத்தில் நேற்றுமுன்தினம் இரவு வீடொன்றினுள் நுழைந்த விசேட அதிரடிப் படைச் சிப்பாய்கள் பெண்ணொருவரைப் பாலியல் வல்லுறவுக்குட்படுத்த முயன்றனர்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, கணேசபுரத்திலுள்ள வீடொன்றுக்கு நேற்றுமுன்தினம் இரவு 11 மணியளவில் ஐந்து அதிரடிப்படையினர் சென்றனர். அவர்களில் இருவர் வீட்டுக்குள் சென்று அங்கிருந்த இரு ஆண்களையும் வேட்டைக்கு வருமாறு அழைத்தனர்.

அவர்கள் இப்போதுவரமுடியாது என மறுக்க, வீட்டின் பின்புறமாக மறைந்திருந்த அதிரடிப்படை அதிகாரி வீட்டிற்குள் சென்று நித்திரையில் இருந்த பெண் மீது வல்லுறவு புரிய முற்பட்டார்.

அப்பெண் சத்தமிடவே உதவிக்கு சகோதரரும் கணவரும் வெளியேயிருந்து உட்செல்ல முனைந்த

(10 ஆம் பக்கம் பார்க்க)

## செய்திகள் உண்மையாக வெளியிடப்படுவதே முரண்பாடுகளை தவிர்த்துக்கொள்ள உதவும்!

### 'ராகிங்' செய்தி விவகாரம் பற்றி அரசியற்துறை அறிவிப்பு

பகிடிவதை பற்றிய செய்திகள் வரும் இவ்வேளையில், 16.01.2003 அன்று 'உதயன்' பத்திரிகையில் யாழ். பல்கலைக்கழக மாணவர் சமூகம் தொடர்பாக வெளிவந்த வாசகர் கடிதத்தைத் தொடர்ந்து, பல்கலைக்கழக மாணவர்களுக்கும் குறித்த பத்திரிகைக்குமிடையே முரண்பாடுகளும் இடைவெளிகளும் ஏற்பட்டு வருகின்றன. இவ்விடயங்கள் தொடர்பாக நாம் சிலவற்றைத் தெளிவுபடுத்த விரும்புகின்றோம் என யாழ். மாவட்ட அரசியற்துறையினர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"எம்மினத்தை பிரித்தாளும் சக்திகளுக்கு இடம்கொடுக்காது ஒன்றிணைந்து செயற்படுவோம்" என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட

(10 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



ஊருக்குள்ள உவையள இருக்க விட்டால் உதுதான் நடக்கும் போல...

SERENDIB AIRLINE
யாழ்ப்பாணத்தில் இருந்து வெள்ளவத்தை விரையும் அழையுங்கள்
J/F 021 - 2223916, 0777 - 517019
01-505632, 074-612656, 01-390128
(சி-518)

# வட - கிழக்குக்கு 3 ஆயிரம் ஆசிரியர்கள் நியமனத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம்

## அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு அறிவிப்பு

(கொழும்பு)

வடக்கு, கிழக்கில் நிலவும் தமிழ் மொழிமூல ஆசிரியர்களின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு 3 ஆயிரம் ஆசிரியர்களையும் 193 தொண்டர் ஆசிரியர்களையும் சேர்த்துக்கொள்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது என்று கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் மட்டும் 6 ஆயிரம் ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவி வருவதாகவும் அமைச்சர் விடுத்துள்ள அறிக்கையொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை - வடமேல், வடமத்திய மாகாணங்களில் தமிழ்மூல பாடசாலைகளில் ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவும் அதேவேளை, சிங்கள மொழி மூல பாடசாலைகளில் ஆசிரியர்கள் மேலதிகமாக இருப்பதாக கல்வி அமைச்சர் கொடித்துவக்கு மேலும் குறிப்பிட்டார்.

இந்த நிலையில் தம்மை ஆசிரியத் தொழிலில் இணைத்துக்கொள்ளும்படி தொண்டராசிரியர்கள் போராட்டம் நடத்துவது நியாயமற்றது என்றும் அவர் கூறியுள்ளார்.

# உள்ளூராட்சி நிறுவனங்களிடையே முகாமைத்துவ சேவைப் போட்டிகள்

(மானிப்பாய்)

உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சின் ஏற்பாட்டில் வடக்கு, கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களுக்கிடையே முகாமைத்துவ சேவைகளை பொது மக்களுக்கு வழங்குவது தொடர்பான போட்டிகள் நடாத்தப்பட்டு பெறுமதிமிக்க பரிசில்கள் மற்றும் விருதுகள் வழங்கப்படவுள்ளன.

இது தொடர்பாக - வடக்கு, கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் எஸ்.விஜயலட்சுமி சகல உள்ளூராட்சி மன்றங்களுக்கும் அறிவித்துள்ளார்.

இப்போட்டிகள் - உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாட்டு நடவடிக்கைகளை சிறப்பாகத் திட்டமிட்டு போட்டித் தன்மையுடன் நிகழ்த்தக் கூடியவாறும், அவற்றின் மொத்தச் செயலாற்றுகையை அதிகரிப்பதன் மூலம் மிகவும் பயனுள்ள சேவைகளை பொதுமக்களுக்கு வழி நடத்தும் நோக்குடனும் நடாத்தப்படவுள்ளன. (100)

### சட்ட வைத்திய அதிகாரிகள் விடுமுறையில் செல்வதால்

# ஞாயிறு தினங்களில் சடலங்களை பொறுப்பேற்க முடியாத நிலை!

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரிகள் இருவரும் ஞாயிற்றுக்கிழமையில் விடுமுறையில் செல்வதால் குறிப்பிட்ட தினத்தில் இறந்தவர்களின் உடல்களை பெறமுடியாதிருப்பதாக உறவினர்கள் விசனம் அடைந்துள்ளனர்.

ஞாயிற்றுக்கிழமை விடுமுறை நாளாகையால், போதனா வைத்தியசாலையில் கடமை புரியும் இரண்டு சட்ட வைத்திய அதிகாரிகளும் கடமைக்கு சமுகமளிப்பதில்லை. இதனால், நீதிமன்றத்தில் திடீர் மரணம் காரணமாக இறந்தவர்களின் உடல்களை பிரேத பரிசோதனை செய்ய முடியாதநிலை ஏற்படுகின்றது. இந்நிலையில் உறவினர்கள் இறந்த உடல்களை உடன் பெற முடியாதுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது. (111,ரா)

# அரசின் மக்கள் விரோத நடவடிக்கைக்கு எதிராக புதிய சக்தி கட்டியெழுப்பப்படும்

## ஜனாதிபதி சந்திரிகா கூறுகின்றார்

அரசாங்கத்தின் மக்கள் விரோத நடவடிக்கைகளுக்கு எதிராகப் புதிய சக்தி ஒன்றுகட்டி எழுப்பப்படும் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

பேருவளையில் இடம்பெற்ற சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் கூட்டமொன்றிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

எனினும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பணம் கொடுத்து, அரசாங்கத்தை கவிழ்க்கப் போவதில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குள் இருந்துகொண்டு தேசிய அரசாங்கம் ஒன்றை உருவாக்கும் முயற்சியில் ஈடுபடும் நபர்களால் ஆட்சிக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் மக்கள் விரோத நடவடிக்கைகளுக்கு எதிராக, மக்கள் விடுதலை முன்னணியின் ஒத்துழைப்பைப் பெற்று புதிய சக்தியொன்றும் உருவாக்கப்படும் என்றும், ஐக்கிய தேசிய முன்னணியில் இருக்கும் நாட்டுக்கு விசுவாசமானவர்கள் அந்த சக்தியில் இணைந்துகொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

# நான்கு மாவட்ட விவசாயிகளுக்கு நிக்கொட் வாகனங்கள் அன்பளிப்பு!

(திருமலை)

நிக்கொட் அமைப்பு - மன்னார், கிளிநொச்சி, மட்டக்களப்பு, வவுனியா ஆகிய மாவட்ட விவசாய அபிவிருத்திக்குத் தேவையான வாகனங்களை வழங்கவுள்ளது.

நாளை காலை 10 மணிக்கு திருமலை ஆளுநர் சிறுவர் பூங்காவில் இவ்வாகனங்களை வழங்கும் நிகழ்வு நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் உழவு இயந்திரங்கள் நான்கு, இருசக்கர உழவு இயந்திரங்கள் ஏழு, சூடடிக்கும் இயந்திரங்கள் ஏழு, நீரிறைக்கும் இயந்திரங்கள் பதினைந்து தெளிகருவிகள் முப்பத்தியொன்று ஆகியன வழங்கப்படவுள்ளன. (05)

# தீவுப் பகுதியின் சிவில் நிர்வாகம்; கடற்படையிடமிருந்து விலக்குக!

## கடற்படைத் தளபதியை கோரியுள்ளதாக மகேஸ்வரன் தெரிவிப்பு

நெடுந்தீவு, காரைநகர், மண்டைதீவு, பொன்னாலை ஆகிய பிரதேசங்களில் கடற்படையினர் நடாத்தும் சிவில் நிர்வாகத்தைத் தடுக்கக் கோரியும், கடற்படையினர் சிவில் நிர்வாகம நடாத்தும் பிரதேசங்களில் பொலிஸாரை நியமிக்கும்படியும், கடற்படைத் தளபதியிடம் கோரிக்கை விடப்பட்டுள்ளதாக அமைச்சர் மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

பல பிரதேசங்களில் - குறிப்பாகக கரையோரப் பிரதேசங்களில் நீண்ட காலமாகக் கடற்படையினர் சிவில் நிர்வாகம் நடாத்துவதால் மேற்படி பிரதேசங்களில் வாழும் மக்கள் பெரும் துன்பங்களையும் அச்சுறுத்தல்களையும் அனுபவிக்கின்றனர்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்ட பின்னர் பல பிரதேசங்களில் சோதனைகள், சுற்றிவளைப்புக்கள் குறைந்த வேளையிலும் - கடற்படையினரின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் பிரதேசங்களில் உடல் சோதனைகள், சுற்றி வளைப்புக்கள் தொடர்ந்தும் இருந்துகொண்டு வருகின்றன என அமைச்சர் மகேஸ்வரன் அண்மையில் கடற்படைத் தளபதி தயா சந்தகிரியைச் சந்தித்துத் தெரிவித்துள்ளார்.

இவற்றை கொள்கையளவில் ஏற்றுக் கொண்ட கடற்படைத் தளபதி - முதலில் நெடுந்தீவுக் கடற்படையினரை விலக்க முடியும் எனவும் ஆனால், அங்கு பொலிஸார் சிவில் நிர்வாகம் நடாத்த போதிய பாதுகாப்பு இருக்கின்றதா என பொலிஸ் மா அதிபரிடம்தான் கேட்கவேண்டும் எனவும் தெரிவித்தார் (லி)

### மிதிவெடி வெடித்ததில் குடும்பஸ்தர் காயம்!

விறகு வெட்டச்சென்ற சமயம் மிதிவெடி வெடித்ததில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுக்காலை நடந்த இச்சம்பவத்தில் - ஏழாலை தெற்கு, மயிலங்காட்டைச்சேர்ந்த சின்னத்தம்பி சின்னத்துரை(வயது 50) என்பவரே காயமடைந்தார். தனது மைத்துனருடன் விறகு வெட்டச்சென்ற சமயம், கோடரியால் விறகு கொத்தும்போது மிதிவெடி வெடித்ததாகத் தெரிய வருகின்றது.

# வடமராட்சி கிழக்குப் பகுதியில் 20 கி.மீ. நீள வீதி திருத்தப்படும்!

(உடுத்துறை)

வடமராட்சி கிழக்கு மாமுனைச் சந்தி தொடக்கம் கட்டைக்காட்டுச் சந்தி வரையிலான 20 கிலோ மீற்றர் தூரம் கொண்ட கடற்கரை வீதி கற்கள் போட்டுத் தார் வீதியாக மாற்றம் செய்யப்படவுள்ளது.

கடந்த வியாழக்கிழமை மேற்படி பகுதிக்குச் சென்று வீதியைப் பார்வையிட்ட 'நிக்கொட்' நிறுவன அதிகாரிகள், யாழ்.மாவட்ட அரச அதிபர், வீதி அபிவிருத்தி அதிகார சபைப் பணிப்பாளர் மற்றும் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் ஆகியோர் உள்ளிட்ட குழுவினரே இது தொடர்பாகக் கலந்தாலோசித்து முடிவெடுத்துள்ளனர். இப்பணி நிக்கொட் நிறுவனத்தினரால் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது. (117)


## யாழ்ப்பாணம் - மாநகர சபை

# கேள்வி அறிவித்தல்

கீழ்க்காணும் இறைச்சிக்கடையை 01.02.2003 முதல் 31.12.2003 வரையான காலப் பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்படிவம் வழங்கும் இறுதித் திகதி: 31.01.2003 ஆம் திகதி வெள்ளிக்கிழமை. மு.ப.10.00 மணிவரை.

கேள்விகள்ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி: 31.01.2003 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப. 2.00 மணிவரை.

கேள்விகள் திறக்கும் திகதி: 31.01.2003 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப.2.30 மணிக்கு.

### விபரம்

| | கேள்விப் பிணைப்பணம் | நிர்ணயித்த ஆகக்குறைந்த கேள்வித் தொகை (வற் நீங்கலாக) |
|---|---|---|
| புங்கன்குளம் ஆட்டிறைச்சிக்கடை (புங்கன்குளம் சந்தையில் கடையை குத்தகைக்காரரே அமைத்தல் வேண்டும்) | 2500/= | 16,500 /= |

மேற்படி கேள்வியில் சித்திபெறும் கேள்விக்காரர் 31.01.2003 ஆம் திகதி குத்தகைப் பணத்தைச் செலுத்தி உடன்படிக்கை செய்யத் தயாராக இருத்தல் வேண்டும்.

மேலதிக விவரங்களை அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

மாநகர சபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்
2003.01.27

(சி-530)

இ.இராமலிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.



## சிறு விளம்பரம்

### மணமகள் தேவை

உயர் இந்து கௌரவ குடும்பம், சதயம், 8 இல் செவ்வாய் (பாவம் குறைவு), 43 வயது, சொந்த நிறுவனம் நடாத்திவரும் விவாகரத்துப் பெற்றவருக்கு தகுந்த மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படும். குறிப்பு உட்பட சகல விபரங்களுடன் தொடர்புகொள்ளவேண்டிய முகவரி. விளம்பர இல.08, நமது ஈழநாடு, 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (218)



ராஜா
யாழ்ப்பாணம்.
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே தின வெளியீடு
விஜய், ஸ்நேகா நடித்த
வசீகரா



10.30, 2.30, 6.00, 9.30 (சி-398)
ரிக்கற்றுக்களை முன்பதிவு செய்துகொள்ளவும்.



நிறைஞ்சனாஸ் சங்கானை
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
லோறன்ஸ், குணால், உஷா நடித்த
அற்புதம்
வெள்ளி. சனி. ஞாயிறு இரவு 8.45 காட்சி
TOMB RAIDER
(சி-397)


# இன்றைய நாள் இனிய நாள்

**28-01-2003 - செவ்வாய்க்கிழமை**

### ஏகாதசி விரதம்

**மேடம்** :- வாகன சுகம், இல்லச்சிறப்பு, தனலாபம், ஆரோக்கியம், குடும்ப மகிழ்ச்சி.

**இடபம்** :- வயிற்று வலி, மனப் பயம், தாழ்ந்த நிலை, பிறருக்குக் கீழப்படிதல்.

**மிதுனம்** :- இலட்சுமீகரம், நன்மதிப்பு, தனதானியச் சேர்க்கை, வாகனசுகம்.

**கர்க்கடகம்** :- ஏமாற்றப்படுதல், சிநேகிதரால் கஷ்டம், மனக்கிலேசம், நடைக்கஷ்டம்.

**சிங்கம்** :- தேகசுகக்குறைவு, அதிக பிரயாசை, பொருட்செலவு, மனமகிழ்ச்சி.

**கன்னி** :- பெரியோர் மதிப்பு, தொழில் சிறப்பு, காரிய வெற்றி, மனமகிழ்ச்சி.

**பிரபல சோதிடர் எஸ்.குகநேசன்**

**துலாம்** :- வீண்மனஸ்தாபம், காரிய விக்கினம், அதிகார விருத்தி, காரியசித்தி.

**விருச்சிகம்** :- பிரயாணத்தால் நன்மை, மனமகிழ்ச்சி, குடும்பச் சிறப்பு, சந்தோஷம்.

**தனு** :- ஆயுதபீடை, சரீர சுகக் குறைவு, வயிற்றில் ரோகம்,

**மகரம்** :- காரியவெற்றி, தன லாபம், களஸ்திரசுகம், குடும்பச்சிறப்பு.

**கும்பம்** :- வாக்குக் கலகம், பெண்களால் கவலை, மனப்பயம், அதிக பிரயாசை.

**மீனம்** :- தனதானிய லாபம், சிநேகிதர் உதவி, பொருள்வரவு, சுபகாரியம் நடத்தல்.

# அரசை விட விடுதலைப் புலிகளுக்கு சர்வதேசம் முக்கியத்துவமளிக்கின்றது

## ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் கருத்து

சர்வதேச உதவி வழங்கும் நாடுகள், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை மதிப்பதைவிட, அவர் கருத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பதைவிட-அன்ரன் பாலசிங்கத்துக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றன. ஒஸ்லோ மாநாட்டில் வைத்து அந்நாடுகள் நிதியுதவி வழங்க முன்வந்தமைக்கும் அதுவே காரணம் என ஜே.வி.பியின் கேகாலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான காமினி ரத்னாயக்க கூறுகின்றார்.

றுவான்வெலிசவில் நடந்த கூட்டமொன்றில் பேசும்போது அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் தொடர்ந்தும் பேசும்போது நிதி உதவிகள் கிடைபபதற்கு- ஐக்கிய தேசியக் கட்சி, விடுதலைப் புலிகளுக்கு என்றும் நன்றி உடையதாக இருக்கவேண்டும்.

ஒஸ்லோவில் நடந்த கூட்டத்தில் அமெரிக்கா காட்டிய ஆர்வம், இனப்பிரச்சினைக்கான அனுதாபத்தின் வெளிப்பாடல்ல. இலங்கையின் இறைமைக்கும், பிரதேச ஒருமைப்பாட்டுக்கும் கிடைத்த அபாய அறிவிப்பே அது. எந்தவொரு நாட்டின் உள்நாட்டுப் பிரச்சினையில் அமெரிக்கா தலையிட்டாலும் அது அந்த நாட்டை அழிவுக்கே கொண்டு செல்லும்.

விடுதலைப்புலிகள்- நீதிமன்றங்கள், பொலிஸ்நிலையங்கள், ஈழ வங்கிகள் என்பவற்றில் ஆரம்பித்து நாட்டைப் பிரித்துவிட முயற்சிக்கும் போது- இது பற்றி நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பினால், பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன - தனக்கு எதுவும் தெரியாதெனக் கூறுகின்றார். நாட்டில் நடப்பது அவருக்குத் தெரியாவிட்டால் அவர்- நிலைமை தீவிரமடைவதற்குள் இராஜினாமா செய்துவிட வேண்டும். அரசாங்கத்தின் ஊடகங்கள் யாவும் - மக்களைத் தவறாக வழிநடத்துவதோடு, பிழையான பிரசாரத்தையும் மேற்கொள்கின்றன.

மக்கள், ஐ.தே.க- விடுதலைப் புலிகள் இணைந்து நடாத்தும் அரசாங்கத்தை நிராகரித்தால் மட்டுமே இங்கு ஒளிமயமான எதிர்காலம் ஏற்படும் என்றார்.

## குடத்தனையில் கசிப்பு விற்பனை அதிகரிப்பு!

(வடமராட்சி கிழக்கு)

மணற்காடு, குடத்தனைப் பகுதிகளில் கசிப்பு உற்பத்தியும் விற்பனையும் உச்சநிலையை அடைந்திருப்பதை அவதானிக்க முடிகிறது.

குடத்தனைப் பகுதியில் கசிப்பு விற்பனை செய்தமை தொடர்பாக மூன்று நபர்கள் ஏற்கனவே நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டனர். இருந்தபோதும் அப்பகுதியில் தொடர்ந்தும் கசிப்பு வியாபாரம் இடம்பெற்றுவருவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கசிப்பு உற்பத்தி, விற்பனையை நிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (17)






கொரியாவிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த குழுவினர் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் 'ஆறுதல் தரும் மாலைப் பொழுது' நிகழ்வினை அண்மையில் நடத்தினார்கள். (111)

# ஐ.நா.பொதுச் செயலாளர் பதவிக்கு ஆதரவு தேடும் ரீரோன் பெர்னாண்டோ

வெளிவிவகார அமைச்சர் ரீரோன் பெர்ணான்டோ, ஐ.நா. பொதுச் செயலாளர் பதவிக்குப் போட்டியிடுவதற்கான பிரசாரத்தை மீண்டும் தீவிரப்படுத்தியிருக்கிறார்.

இலங்கை அரசாங்கத்தினால், ஐ.நா. பொதுச் செயலாளர் பதவிக்கான வேட்பாளராக உத்தியோகபூர்வமாக ரீரோன் பெர்ணான்டோ நியமிக்கப்படாவிட்டாலும், இவர் வெளிநாடுகளில் தனக்கு ஆதரவுதேடும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறார்.

181 பொதுச்சபை உறுப்பினர்களைக் கொண்ட ஐ.நா.சபையில் பொதுச்செயலாளர் பதவியைப் பெற, 15 பாதுகாப்புச் சபை நாடுகளிலும் ஆதரவினைப் பெறுவதும் அவசியமாகும்.

ஐ.நா.பொதுச் செயலாளர் பதவிக்கு ஐந்து பேர் போட்டியிடவுள்ளதாகத் தெரியவருகின்றது. ரீரோன் பெர்ணான்டோவைத்தவிர, இந்தோனேசியா, தாய்லாந்து, சிங்கப்பூர் ஆகிய நாட்டவர்களும் இப்போட்டியில் குதிக்கலாம் எனக் கூறப்படுகிறது.

தொடர்ச்சியாக இரண்டு பதவிக் காலங்களை ஆபிரிக்க நாட்டவர் ஒருவர் வகித்ததைத் தொடர்ந்து, இம்முறை ஆசிய நாட்டவர் ஒருவர் ஐ.நா.வின் பொதுச்செயலாளராகத் தெரிவு செய்யப்படுவதற்கு வாய்ப்புக்கள் இருப்பதாகக் கருதப்படுகின்றது.

1945இல் அமைக்கப்பட்ட ஐ.நா. சபையில், பர்மா நாட்டைச் சேர்ந்த யூ தாண்ட் என்பவர் மட்டுமே பொதுச் செயலாளர் பதவிக்குத் தெரிவு செய்யப்பட்ட ஒரேயொரு ஆசிய நாட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இலங்கையின் நீதித்துறையில் அனைத்து மட்டங்களிலும் ஊழல்

## 'மார்கா' கருத்துக் கணிப்பில் அதிர்ச்சித் தகவல்

இலங்கையின் நீதித்துறையில் அனைத்து மட்டங்களிலும் ஊழல் நிரம்பியிருப்பதாக மார்கா இன்ஸ்ரிரியூட் நடத்திய கருத்துக் கணிப்பிலிருந்து தெரிய வந்திருக்கின்றது.

நீதித்துறையில் உள்ள ஊழல் தொடர்பாக வட-கிழக்கு பகுதி தவிர்ந்த ஏனைய பகுதிகளில் கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டது. இந்தக் கருத்துக் கணிப்பில் இருந்தே நீதித்துறையில் அனைத்து மட்டங்களிலும ஊழல் நிலவுவது தெரியவந்திருக்கிறது.

பொலிஸ் உத்தியோகத்தர்கள், நீதிமன்ற ஊழியர்கள், சட்டத்தரணிகள், பிஸ்கால் உத்தியோகத்தர்கள் மற்றும் நீதிபதிகள் வரை ஊழல் நடவடிக்கைகளில் சம்பந்தப்பட்டிருப்பது இக்கருத்துக் கணிப்பின் போது வெளியாகியிருக்கிறது.

அத்துடன், நீதித்துறையில் பணியாற்றும் அதிகாரிகளுக்குப் போதிய பயிற்சிகள் வழங்கப்படாமை, நீதிமன்றத் தீர்ப்புக்கள் தாமதமாவது, இன, மத, மொழி, சமூக, பால்ரீதியான பாரபட்சங்கள் - நீதித்துறையில் குறைபாடுகளாக இருப்பதாகவும் கருத்துக்கணிப்பிலிருந்து அறியப்பட்டிருக்கிறது.

# அமைச்சர் ஹக்கீம் வன்னிக்கு சென்று பிரபாவை சந்திப்பாராம்

## கொழும்புப் பத்திரிகை தகவல்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனைச் சந்தித்துப் பேசுவதற்காக அமைச்சர் ரவூப் ஹக்கீம் வன்னிக்குச் செல்ல விருப்பதாகச் சிங்களப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

எதிர்வரும் வாரங்களில் பிரபாகரனுக்கும் - ரவூப் ஹக்கீமுக்கும் இடையிலான சந்திப்பு நிகழும் என்றும் அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

வடக்கில் முஸ்லிம் மக்களின் மீளகுடியமர்வு, அவர்களின் பாதுகாப்புக் குறித்து இச்சந்திப்பில் கலந்துரையாடப்படும் என்றும் அச்செய்தியில் கூறப்பட்டிருக்கிறது.

# பொ.ஐ.மு. ஆட்சியில் மும்மடங்காக அதிகரித்த வெளிநாட்டுக்கடன்

1994 ஆம் ஆண்டு ஐ.தே.க. ஆட்சியிலிருந்து விலகியபோது 550 கோடி ரூபாவே வெளிநாட்டுக் கடனாக இருந்தது. ஆனால், 2001 ஆம் ஆண்டு தற்போதைய அரசாங்கம் பதவிக்கு வந்தபோது 1,500 கோடி ரூபாவாக இது அதிகரித்திருந்தது என்று கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

பொ.ஐ.முன்னணியின் ஆறு வருட ஆட்சியில் வெளிநாட்டுக் கடன் மூன்று மடங்குகளாக அதிகரித்தும் 950 கோடி ரூபாவைச் சந்திரிகா அரசு வெளிநாடுகளில் கடனாகப் பெற்றிருக்கிறது என்று - அரசாங்கம் முன்னெடுக்கும் சமாதான முயற்சிகள் பற்றியும், பொருளாதார அபிவிருத்திககான முயற்சிகள் பற்றியும், புத்தளத்தில் இடம்பெற்ற மக்கள் பிரதிநிதிகளுக்கு விளக்கமளிக்கும் நிகழ்சசியில் அமைச்சர் கருணாசேன கொடிததுவக்கு தெரிவித்தார்.

சமாதானத்தை ஏற்படுத்தி, நாட்டின் பொருளாதாரத்தை அதிகரிப்பதே தற்போதய அரசாங்கத்தின் நோக்கமாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# வடமராட்சிப் பகுதியில் விரைவில் ஊனமுற்றோருக்கு தொழிற்பயிற்சி

ஊனமுற்றோர் சங்கத்தின் ஏற்பாட்டில் ஊனமுற்றவர்களுக்கு தொழிற் பயிற்சி வழங்கப்படவிருக்கிறது.

வடமராட்சி பிரதேசத்திலுள்ள ஊனமுற்றவர்களுக்குத் தொழிற் பயிற்சி வழங்குவது தொடர்பான கூட்டம் வரும் மாதம் 3ஆம் திகதி காலை 10 மணிக்குச் சதாபொன்ஸ் கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

'இக்கூட்டத்தில் சகல ஊனமுற்றவர்களையும் கலந்துகொள்ளுமாறு வடமராட்சி ஊனமுற்றோர் சங்கத்தின் செயலாளர் எஸ்சினனத்தம்பி அறிவித்துள்ளார்.(ச)

# தனிச் சிங்களத்தில் மேற்கொள்ளப்படும் பொலிஸ் பதிவு, நீதிமன்ற நடவடிக்கைகள்

## திருமலையில் தொடரும் தமிழ்மக்களின் அவலநிலை

(திருகோணமலை)

திருகோணமலையில் பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யப்படுகின்ற பதிவுகள் மற்றும் நீதிமன்றத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற பதிவுகள் யாவும் தனிச் சிங்களத்தில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் திருமலை மாவட்ட சட்டத்தரணிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

அண்மையில் திருகோணமலைக்கு விஜயம் செய்திருந்த மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் கலாநிதி கொட்பிறி குணதிலக மற்றும் அவரது குழுவினரைச் சந்தித்த - திருமலை மாவட்டச் சட்டத்தரணிகள் சங்கத்தினர், திருமலையில் 70% மான மக்கள் தமிழ்மக்களாக இருக்கின்றபோதும் பதிவுகள் தமிழில் மேற்கொள்ளப்படுவதில்லை என்பதைத் தெரியப்படுத்தினர்.

இதற்குப் பதிலளித்த கொட்பிறி குணதிலக - இது தொடர்பாகச் சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டபோது - தமிழில் பதிவுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக அவர்கள் கூறியதாகத் தெரிவித்தார்.

இதனை உடனடியாக மறுத்த சட்டத்தரணிகள் சங்கத்தினர் தொடர்ந்தும் பதிவுகள் யாவும் தனிச் சிங்களத்திலேயே செய்யப்பட்டு வருவதாகத் தெரிவித்தனர்.

இதேவேளை - திருகோணமலை நகரசபையினால் மூடப்பட்ட பழைய சந்தைப்பகுதியில் சிங்கள வியாபாரிகள் பலர் இன்னமும் வியாபாரத்தினை மேற்கொண்டு வருகின்றனர். இவர்களுக்குப் படையினர் உதவி செய்து வருவதால், அவர்கள் புதிய சந்தைக் கட்டடத்திற்கு நகராமல் தொடர்ந்தும் பழைய சந்தையிலேயே தமது வியாபாரத்தை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி சந்தைப்பகுதியில் வியாபாரத்தில் ஈடுபட்டுவரும் சிங்கள வியாபாரிகள் நகரசபைக்கு எதுவித வரியையோ, கட்டணத்தையோ செலுத்துவதில்லை எனவும் நகர சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

இவ்விடயம் மனித உரிமை ஆணைக்குழுவின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டபோது - இவ்விடயம் பற்றி அரசியல் உயர்மட்டத்திற்குத் தெரியப்படுத்தியே மேலதிக நடவடிக்கைக்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என அவர்கள் பதில் தந்துள்ளனர்.

# சட்டவிரோதமாக மண் அகழ்வோர்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்!

## சுற்றுச் சூழல் பாதுகாப்புச் சங்கம் அறிவிப்பு

குடாநாட்டிலுள்ள பொது இடங்கள் மற்றும் வயல்நிலங்களில் சட்டவிரோதமாக மணல் அகழ்வோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ்.மாவட்ட சுற்றுச் சூழல் பாதுகாப்புச் சங்கம் அறிவித்துள்ளது.

சட்டவிரோதமாக மணல் அகழ்வது தொடர்பாகச் சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சங்கம் பத்திரிகைக் குறிப்பொன்றை வெளியிட்டுள்ளது.

அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது

குறுகிய இலாப நோக்கம் கருதி குடாநாட்டிலுள்ள வயல்நிலங்கள், பொது இடங்கள், ஆட்கள் இல்லாத காணிகளில் பெருமளவிலான மணல அகழ்ந்து எடுக்கப்பட்டு வருகிறது.

குறிப்பாக மீசாலை, மட்டுவில், வரணி, கச்சாய், அரியாலை, வல்லிபுரம், கரவெட்டி தெற்கு, வல்லை, மணறகாடு, துன்னாலைப் பகுதிகளில் இரவு வேளைகளிலும் பகல் வேளைகளிலும செல்லும் உழவு இயந்திரங்கள மண்ணினை அகழ்ந்து வருவதாக எமக்குப் பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இவ்வாறு சட்டவிரோதமாக மணல் அகழ்வோரினால் இந்தப் பிரதேசங்களின் இயற்கைச் சூழல் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது. மணல் அகழ்வதால் ஏற்படும் குழிகளில் மழைநீர் தேங்கிநின்று நுளம்புப் பெருக்கத்தை ஏற்படுத்துவதுடன், வயல் நிலங்களில் வெள்ள அழிவுகள் ஏற்படுகின்றன. பயிர் நிலங்கள் உவர் நிலமாக மாறும் அவலநிலையும் சில இடங்களில் ஏற்பட்டுள்ளது.

இதனால் மேற்குறிப்பிட்ட இடங்களில் மணல் அகழ்வு செய்வதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளதுடன், மணல் அகழ்வில் ஈடுபடும் உழவு இயந்திர உரிமையாளர்களுக்கும், இந்தச் சம்பவத்தில் ஈடுபடுவோருக்கும் எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## தமிழீழ மீட்புநிதிக் கடன்மீளல்

தமிழீழ மீட்புநிதிக் கடனை மீளளிப்பதற்காக 1990 ஆம் ஆண்டிலிருந்து 2002 ஆம் ஆண்டு வரை குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டவர்களில், இதுவரை தமது கடனை மீளப்பெறாதோர் பின்வரும் நாட்களில் மீளப் பெறலாம் என நிதித்துறைப் பொறுப்பாளர் யோ.தமிழ்க்குமரன் அறிவித்துள்ளார்.

### நேர அட்டவணை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **14.02.2003** | | | | | |
| வருவாய்ப்பகுதிச் செயலகம் | புளியங்குளம் | காலை | 10.00 | மு.ப | 10.30 மணி |
| மத்திய கல்லூரி | கிளிநொச்சி | பி.ப. | 03.00 | பி.ப | 04.00 மணி |
| **15.02.2003** | | | | | |
| வேம்பொடுகேணி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை | பளை | காலை | 09.00 | ந.ப | 12.00 மணி |

## மெய்வல்லுநர் போட்டி

(இளவாலை)

இளவாலை மாரீசன்கூடல் றோமன் கத்தோலிக்கத் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 31 ஆம் திகதி பாடசாலை அதிபர் றோபோட் உதயகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விளையாட்டு விழாவில் நாடாளுமன்ற உறுப்பினர் வீ. ஆனந்தசங்கரி பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

(41)

## அநுரா, பேரியல், வீரவன்ச, மங்கள, தினேஷ்

# எதிர்க்கட்சித் தலைவர்கள் பங்கேற்க நாளை மறுநாள் மறியல் பேரணி

சமாதானம் என்ற பெயரில் ஐ.தே.க. அரசாங்கம், தமிழீழத்துக்கான வாய்ப்புக்களையே புலிகளுக்கு வழங்கிக் கொண்டிருப்பதாக நாட்டைத் தாரை வார்ப்பதற்கு எதிரான தேசிய அமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.

அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையை எதிர்த்து எதிர்வரும் 29 ஆம் திகதி ஆர்ப்பாட்டப் பேரணிகளையும், கண்டனக் கூட்டங்களையும் நடாத்தவிருக்கின்றது.

இந்தப் பேரணியில் அநுரா பண்டாரநாயக்க, பேரியல் அஷ்ரப், விமல் வீரவன்ச, மங்கள சமரவீர, தினேஷ் குணவர்த்தன ஆகியோரும் இந்தக் கண்டனப் பேரணியில் கலந்து கொள்ளவுள்ளனர்.

## ஆசிரியர் கலாசாலை பரீட்சைகள் அடுத்த மாதம்!

(ஊரெழு)

பலாலி ஆசிரியர் கலாசாலை முதலாம் வருட ஆசிரிய மாணவர்களது அரையாண்டுப் பரீட்சைகள் அனைத்தும் அடுத்த மாதம் 3ஆம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ளன.

இவ்வருடம் முதல் - உளவியல், கல்வியியல், உடற்கல்வி, தமிழ் ஆகிய பாடங்கள் பொதுப் பரீட்சையாக உயர்கல்வி அமைச்சினால் அனைத்துக் கலாசாலைகளிலும் நடாத்தப்பட இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

(96)

## மட்டக்களப்பு புனர்வாழ்வுப் பணிகளில்

# உள்ளூர், சர்வதேச அமைப்புக்கள் இணைந்து பணியாற்ற முடிவு!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் எதிர்வரும் காலங்களில் மேற்கொள்ளப்பட இருக்கும் புனர்வாழ்வு நடவடிக்கைகள் மூலம் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கும், அபிவிருத்தி நடவடிக்கைகளைத் தீர்மானிப்பதற்கும் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களும் ஐக்கிய நாடுகளின் இணைய ஸ்தாபனங்களும், உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்களும் ஒன்றிணைந்து செயற்படத் தீர்மானித்துள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை இந் நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கிடையில் நடந்த சந்திப்பின்போதே மேற்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## ஒஸ்லோ கூட்டம் பற்றி நாடாளுமன்றத்தில் விவாதம்

(கொழும்பு)

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நிகழ்த்திய உரை குறித்த விவாதம் நாடாளுமன்றத்தில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 30 ஆம், 31 ஆம் திகதிகளில் இந்த விவாதம் நடைபெறும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

# கழிவுநீர்க் கால்வாய்களால் போக்குவரத்துக்கு பாதிப்பு!

பண்டத்தரிப்பு பிரதான வீதியோரமாகச் செல்லும் கழிவுநீர்க் கால்வாய், புனரமைப்பு வேலைகளுக்காக அகழப்பட்டு, வேலைகள் பூர்த்தியாகாத நிலையிலிருப்பதால் போக்குவரத்தில் சிரமங்கள் ஏற்பட்டுள்ளன.

இந்த வாய்க்கால்கள் கடந்த பல வருடங்களாகப் பராமரிப்பின்றி தூர்ந்து போய் சமதரையாகக் காணப்பட்டன.

சுமார் இருமாதங்களுக்கு முன் புனரமைப்பதற்காக இவை அகழப்பட்டு வேலை இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளது. வெட்டிப் போடப்பட்ட மண் மேடுகள் அகற்றப்படாமலும் கால்வாய் கட்டப்படாமலும் உள்ளதால், போக்குவரத்தில் சிரமங்கள் ஏற்படுகின்றன. (71)

## உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் மெய்வல்லுநர் போட்டி

(உடுப்பிட்டி)

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

இவ்விழாவில் கல்லூரியின் பழைய மாணவனும், கணினிப் பொறியியற்றுறை வல்லுநரும், கனடா ஸ்காபரே பல்கலைக்கழகப் பணிப்பாளருமான த.வசந்தகுமார் பிரதமவிருந்தினராகக் கலந்து சிறப்பித்தார்.

மேற்படி பாடசாலையின் இல்ல விளையாட்டுப்போட்டிகளில் 280 புள்ளிகளைப்பெற்று செல்லையா இல்லம் முதலாம் இடத்தையும், பிறவுண், நியூட்டன், பிக்னல் ஆகிய இல்லங்கள் முறையே 2 ஆம், 3 ஆம், 4 ஆம் இடங்களையும் பெற்றுக்கொண்டன.

# வட-கிழக்கு நூலகர்களுக்கான தகுதிகாண் காலம் நீடிப்பு

(மானிப்பாய்)

வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தின் கீழ் பணிபுரிகின்ற நூலகர்களுக்கான தகுதிகாண் காலம் மேலும் மூன்று வருடங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

இது விடயமான சுற்றறிக்கையொன்று, வடக்கு - கிழக்கு உள்ளூராட்சி ஆணையாளரால் சகல உள்ளூராட்சி மன்றங்களுக்கும் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கடந்த 1997.08.01 ஆம் திகதிக்குப் பின்னர் நியமனத் திகதியிடப்பட்டு, 2001 ஆம் ஆண்டு நியமனம் பெற்ற நூலகர்கள் - நியமனத் திகதியிலிருந்து மூன்று வருடங்களுக்குத் தகுதிகாண்நிலையில் வைக்கப்பட்டிருந்த காலம் முடிவடைந்தும்,

மேலும் மூன்று வருடங்களுக்கு தகுதிகாண்/தடைகாண்நிலை நீடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(100)

# நீரிழிவு நோய் DIABETES

பகுதி 2

- ச.ஆ.கோபாலமூர்த்தி.

## நீரிழிவு நோய் ஏற்படும் வாய்ப்புடையோர்

1. நீரிழிவு நோய் பாதிப்புள்ள குடும்பங்களில் பிறந்தோர்.
2. உயரத்துக்கு ஏற்ற நிறையைவிட அதிக நிறையுடையோர். அதாவது உடல் எடைச் சுட்டெண் (**High Body mass Index**) அதிகமாக உள்ளோர்.
3. உடல் உழைப்பற்ற தொழில் செய்வோர். **(SEDENTARY WORKERS)**
4. கூவைக்கட்டு, றுபெல்லா போன்ற வைரசு நோய் ஏற்பட்டவர்கள். (**VIRUS** என்ற சொல்லிற்குச் சமமான தமிழ்ச் சொல் "அம்மன்" என்பதாகும். எனவே, வைரசு நோய்கள், அம்மன் வருத்தங்கள் எனவும் அழைக்கப்படும். அம்மன் என்ற சொல், பெண் தெய்வத்தைக் குறிக்கவும் பயன்படுத்தப்படுகிறது. இதனால், சிலர் அம்மன் வருத்தம் என்றால், அம்பாளினால் தோற்றுவிக்கப்படும் வருத்தம் எனத் தப்பெண்ணம் கொள்கின்றனர். இதற்குச் சிகிச்சையளிக்கக் கூடாது, மருந்துகள் பயன்படுத்தினால் அம்பாளின் கோபத்துக்கு ஆளாக நேரிடும் என நம்புகின்றனர். சின்னமுத்து நோய்க்கான தடுப்பு ஊசி, **MMR** தடுப்பு ஊசி போன்றவற்றை ஏற்றாது தவிர்ப்பதால், சின்னமுத்து, கூவைக்கட்டு, றுபெல்லா நோய்களுடன் வேறுபல நோய்களும் ஏற்பட வழிவகுக்கின்றனர். சுகாதார அதிகாரிகளும், வைத்தியர்களும் கூறும் அறிவுரைகளைக் கிரகித்துச் சுக வாழ்வு வாழ அனைவரும் முன்வர வேண்டும்.)
5. 40 வயதுக்கு மேற்பட்டவர்கள்.
6. பொரித்த நொறுக்கு உணவை அடிக்கடி உண்போர்.
7. தீங்குதரும் இரசாயனப் பொருட்களால் நிறமூட்டப்பட்ட ரொபி, கேக், சோடா, கோலா போன்ற மென்பானங்கள், குளிர் களி (**ICE CREAM**), சர்பத் போன்றவற்றை அதிகளவில் அருந்துவோர்.
8. பச்சை இலைகள், நார்ப்பொருள்கள் போன்றவற்றைச் சேர்க்காது மாப்பொருளால் தயாரிக்கப்படும் பண்டங்களையே உண்போர். கொழுப்பு மிகுந்த உணவை அதிகம் உண்போர்.
9. இரவில் காபோவைதரேற்றினாலான உணவு வகைகளை மாத்திரம் அதிகமாக அல்லது ஒரு தடவைக்கு மேல் உண்போர்.
10. விபத்துக்கள், ஷெல் சிதறல்கள், துப்பாக்கி ரவைகள், கத்திக் குத்து போன்றவற்றால் சதையியில் காயம் ஏற்பட்டவர்கள்.
11. சதையியில் புற்றுநோய் ஏற்பட்டவர்கள்.
12. இனிப்பு ஊட்டப்பட்ட பானங்கள், இனிப்பு ஊட்டப்பட்ட உணவுகள், கிழங்கு வகைகளை அதிகம் நுகர்வோர்.
13. உடலில் அதிகம் எரிகாயம் ஏற்பட்டோர்.
14. போதைப்பொருட்கள், மதுபானம், பீடி, சிகரட், சுருட்டு போன்றவற்றைப் பயன்படுத்துவோர்.
15. தயசைட் சிறுநீர் பெருக்கிகள் (**THIAZIDE DIURETICS**) ஸ்ரீறொயிட் வகையைச் சேர்ந்த பிறெட்னிசலோன் போன்ற மருந்துகளைப் பயன்படுத்துவோர்.
16. ஹோமோன் சுரப்புகள் எதிலாவது பிரச்சினையுடையோர்.
17. நெருக்கீடுகள், மன உழைச்சல், பொறாமை, பரபரப்பு, எரிச்சல் சுபாவம், பழிவாங்கும் எண்ணம், கடுங்கோபம் போன்றவற்றைக் கொண்டிருப்போர்.
18. நேரமுகாமைத்துவம் பேணாதவர்கள். ஒரே நேரத்தில் பல விடயங்களைச் செய்து, மனச்சமநிலை தளம்பிப் பதகளிப்போர். எதிலும் திருப்தியடையாத மனமுடையோர். கடன் பழுவினால் நிம்மதியிழந்து தவிப்போர். பொருட்களை ஒழுங்காக உரிய இடங்களில் வைக்காததனால், அவற்றைத்தேடி மனக்குழப்பமடைவோர். தமது திறமைக்கும் வலிமைக்கும் அப்பாற்பட்ட செயல்களைச் செய்யமுயன்று அவமானமடைவோர்.
19. அதிக அளவில் பூச்சிநாசினிகள் விசிறப்பட்ட மரக்கறிகளையும், பழங்களையும் உண்போர். விசிறப்பட்ட பூச்சிநாசினியின் வீரிய அழிவுக்காலம் முடிவதற்கு முன் பறிக்கப்பட்ட மரக்கறிகளையும், பழங்களையும் உண்போர். தீங்குபயக்கும் இரசாயனப் பொருட்களைப் பயன்படுத்திப் பழுக்கவைத்த பழங்களை உண்போர். தீங்குபயக்கும் இரசாயனப் பொருட்களைப் பயன்படுத்திப் பேணிய மீன், இறைச்சி போன்றவற்றை உண்போர்.
20. கர்ப்பகால நீரிழிவு ஏற்பட்ட பெண்கள்.
21. நிறை கூடிய குழந்தை, கருப்பையில் இறந்த குழந்தை, குறைபாடுடைய குழந்தைகளைப் பெற்றோருக்கும், அதிக குழந்தைகளைப் பெற்றோருக்கும், பல தடவை கருச்சிதைவு செய்தோருக்கும் நீரிழிவு ஆபத்து இருப்பதாகக் கூறப்படுகிறது.
22. வைத்தியரின் ஆலோசனையின்றி "பாமசி"களில் மருந்துகளை வாங்கிப் பயன்படுத்துவோர்.
23. குருதியில் அதிக கல்சியம் இருக்கும் (**HYPER CALCEMIA**) நோயாளிகள்.
24. குருதியில் அதிக முக்கிளிசரைட் (TRI GLYCERIDE) இருக்கும் (**HYPER LIPIDEMIA**) நோயாளிகள்.
25. பச்சை குற்றுவித்தவர்களும், தீங்குபயக்கும் இரசாயனப் பொருட்கள் அடங்கிய கொலோன், வியர்வை நிறுத்தி போன்றவற்றை உடலில் விசிறிக்கொள்வோரும்.
26. உடலின் நடுப்பகுதிச் சுற்றளவு அசாதாரணமாக மிகுந்திருப்போர்.
27. இரட்டையர்களில் ஒருவருக்கு நீரிழிவு இருப்பின் மற்றையவருக்கும் நீரிழிவு ஏற்படும் அபாயம் உண்டு.
28. மாதவிடாய் வற்றிய (**MENOPAUSE**) பெண்களில் ஈஸ்ட்ரோஜின் ஹோமோன் ஊட்டல் செய்பவர்கள்.
29. சிலவகையான பக்டீரியாத் தொற்றுநோய் ஏற்பட்டவர்கள்.

### உடலில் குளுக்கோஸின் அளவு பேணப்படும் பொறிமுறை

நாம் உண்ணும் உணவிலும், பானங்களிலும் இருக்கும் சீனி, குளுக்கோசு போன்றவை அதிக சமிபாடு தேவையற்றனவாக இருப்பதால், விரைவாகச் சிறுகுடலை அடைந்து, விரைவாக அகத்துறிஞ்சப்பட்டுவிடும். இப்பொருட்களை அதிகமாக அருந்தும்போது, குருதியில் குளுக்கோஸின் செறிவு மிக அதிகமாகும். இவ்வேளையில், சதையி அதிக இன்சுலினை விரைவாகச் சுரக்கும். இன்சுலின் உடற்கலங்களுக்குள் குளுக்கோசை அனுப்பியும், அதிகமாயிருக்கும் குளுக்கோசைக் கிளைக்கோஜினாகத் தொகுத்தும், குருதியில் குளுக்கோசின் மட்டத்தைப் பேணும். உபவாசம் அல்லது அதிக உடல் உழைப்புக் காரணமாகக் குருதியில் குளுக்கோஸின் செறிவு குறையும்போது கோட்டிசோல், அதிரனிலீன், குளுக்கோன் போன்ற ஹோமோன்கள் சுரக்கப்படும். இந்தக் ஹோமோன்கள் இன்சுலினின் தொழிற்பாட்டிற்கு எதிர்மறையான தொழிற்பாட்டைக் கொண்டவை. இவை கிளைக்கோஜினைக் குளுக்கோசாக மாற்றிக் குருதியில் குளுக்கோஸின் அளவைக் கூட்டும். சுகதேகிகளில் இந்த ஹோமோன்கள் தேவைக்கேற்பச் சுரக்கப்படுதல் மூலம் இரத்தத்தில் குளுக்கோஸின் அளவு சீராகப் பேணப்படும்.

(தொடரும்)

# சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்த சார்லி சாப்லின்

## அரங்கம்- 17

அவர்தான் சிறுவனின் தந்தையா என்று மருத்துவர் கேட்க, அச்சிறுவன் குழந்தையாகக் கிடைத்தபோது கூடவே கிடைத்த குறிப்பை எடுத்துக்காட்டுகிறார் சார்லி.

சிறுவனுக்கு நல்ல கவனிப்பும், பாதுகாப்பும் கிடைக்க அநாதை விடுதி அதிகாரி



களுக்கு எழுதப்பட்ட குறிப்பு அது. அதே சமயம் சிறுவனின் அடையாளங்கள், காணாமற்போன அவள் குழந்தையுடன் பொருந்துவதாக எட்னாவிடமும் கூறப்படுகிறது.

சாப்ளினின் வாழ்க்கை வரலாற்றை எழுதிய டேவிட் ரொபின்ஸன் இந்தக் காட்சியை "படத்திலேயே மிக அசாதாரணமானதென்றும் உலக சினிமா சரித்திரத்திலேயே மறக்க முடியாத" ஒன்றாகவும் குறிப்பிடுகிறார். சிறுவன் வைக்கோல் போல் கட்டப்பட்டு, அநாதை விடுதி வண்டியில் ஏற்றப்படுகிறான். மனமுடைந்த நாடோடி, பொலிஸ் துரத்த வீடு மேலெல்லாம் ஏறி, வண்டியைத் தடுத்து, "மகனை" காப்பாற்ற முனைகிறான். அனாதை விடுதியின் இன்னல்களிலிருந்து அச்சிறுவனைக் காப்பாற்றியதும், அந்த நாடோடி கதாநாயகனாகி விடுகிறான்.

அந்தச் சிறுவன் தன் தாயுடன் இணைகிறான். அவர்களுடைய ஆடம்பர வீட்டிற்கு நாடோடி அழைக்கப்படுகிறார். இத்துடன் படம் முடிவடைகிறது.

சார்லி சாப்ளினின் மற்றப் படங்களிலிருந்து 'த கிட்'டின் வெற்றி வித்தியாசமான ஒன்றாக இருந்தது. காரணம், குறைந்த நகைச்சுவையும் அதிக உணர்ச்சிகரமான சம்பவங்களும் இருந்தன. இந்த உணர்ச்சிக் குவியல்களுக்காகவே மக்கள் இதை விரும்பினார்கள். அந்த நிராகரிக்கப்பட்ட குழந்தைக்குத் தேவை அன்பு. ஏழையாகவும், பெற்றோராக இருக்கத்தகுதி இல்லாதவராகவும் இருந்தாலும், நாடோடியால் மட்டுந்தான் அவனுக்கு அந்த அன்பைக் கொடுக்க முடிந்தது. "தந்தைக்கும்" மகனுக்குமிடையே ஏற்பட்டிருந்த வலுவான அன்பு, உடைக்க முடியாததாக இருந்தது.

சார்லியின் சொந்த வாழ்வில் தொடர்ந்து விரிசல் ஏற்பட்டு வந்தது. 1920 ஏப்ரலில் மில்ட்ரெட் விவாகரத்து நடவடிக்கைகளைத் துவக்க, நவம்பரில் அவர்கள் அதிகாரபூர்வமாக விவாகரத்துப் பெற்றார்கள்.

ஒரு வழியாக வாழ்க்கை அமைதியாக, 1921 இல் சார்லி நண்பர்களை அனுப்பி தன் தாய் ஹன்னாவை அமெரிக்காவுக்கு அழைத்து வரச்செய்தார். அவள் ஆச்சரியப்படும் வகையில் ஒரு அலமாரி நிறையப் புதுத்துணிகளை அவர்கள் அடுக்கினார்கள்.

இன்னமும் அவள் மனம் குழப்பமடைந்திருந்தாலும் பயணத்தைச் சந்தோஷமாக அனுபவித்தாள். ஒரு சுங்க இலாகா அதிகாரியை யேசு கிறிஸ்துவாகத் தப்பாக நினைத்ததைத் தவிர அவள் சாதாரணமாகவே நடந்துகொண்டாள். பல வருடங்கள் வறுமையிலும், சோகத்திலும், மனநிலை பாதிக்கப்பட்டவர்களின் விடுதியிலும் உழன்ற பின்னர் இறுதியில் தன் சொந்த வீட்டிற்கு வந்து சேர்ந்தாள். இந்த மாறுதல்களினால் அவளுக்கு அதிக பாதிப்பெதுவும் இருக்கவில்லை. அங்கு வருபவர்களுக்கெல்லாம் அவள் ஐஸ்கிறீம் கொடுக்க விருப்பப்பட்டாலும், பொதுவாக அவள் சாந்தமாகவும் மனநிறைவுடனும் காணப்பட்டாள். அவள் குடும்பத்தில் ஐஸ்கிறீம் நல்ல காலங்களுக்கான அறிகுறியாக இருந்திருக்கிறது.

1921 ஆகஸ்ட் 22 ஆம் நாள் சார்லிதான் தயாரித்துக் கொண்டிருந்த புதிய படத்தின் வேலைகளை விட்டுவிட்டு ஐரோப்பா செல்வதாக அறிவித்தார். ஐந்து நாட்களுக்குப் பிறகு லண்டனுக்குக் கப்பலில் பயணமானார்.

கடந்த மற்றும் நிகழ்காலங்கள் அவர் மனதில் சுழன்று காட்சியளித்தன. 1910 இல் பிரெட்கர்னோவுடன், வேலைக்கான நன்றியோடு அமெரிக்காவிற்குக் கப்பலில் பயணம் செய்தார். பதினாறே வருடங்களுக்குப் பிறகு இன்று, அவர் உலகிலேயே மிகப் பிரபலமான மனிதர்களில் ஒருவர்.

அவருடைய லண்டன் ரயில் பயணத்தின்போது ஒவ்வொரு ரயில் நிலையத்திலும் மக்கள் அவரைக் காணக் காத்திருந்ததோடு, லண்டனிலும் உற்சாகமான கூட்டம் காத்திருந்தது.

லண்டன் நகரம் ஆரவாரிக்கும் மக்கள் வெள்ளத்தால் மூழ்கியிருந்தது.

தான் தங்கியிருந்த ஹோட்டலின் பின்பக்க வழியின் மூலம் நழுவிச்சென்று பசியும் எதிர்பார்ப்பும் நிறைந்த இளமைக் காலத்தில் - தான் அறிந்த இடங்களுக்கு மறுபடியும் சென்றார். இவைகளை அவர் பல படங்களில் மறுபடியும் ஏற்படுத்திக் காட்டியிருக்கிறார். அங்கு அதிக மாற்றங்கள் இல்லாவிட்டாலும் அவருக்கு அது வேற்று உலகமாகவும், வேறு சார்லியை நினைவு கூருவதாகவும் தோன்றியது. அவருக்கு அப்போது வயது முப்பதிரண்டுதான்.

அந்த வேற்று வாழ்க்கையில் அவருக்குத் தெரிந்திருந்த பல பேரைச் சந்தித்தார். வறுமையை எதிர்த்து பாடுபடுபவர்களுக்குரிய மதிப்பை அளித்து வந்தாலும், வறுமையால் ஆட்கொண்டவர்களுக்குப் பரிதாபத்தைத் தெரிவித்து வந்தாலும் அது இனியும் அவர் உலகம் இல்லை. அவர் இப்போது பிரபலமானவர்களையும், எழுத்தாளர்களையும், நடிகர்களையும், அரசியல்வாதிகளையும் சமநிலையில் சந்தித்து வந்தார். உற்சாகத்துடன் அவர் பிரான்சுக்கும், ஜேர்மனிக்கும் சென்றார். ஆனால், 1921 ஒக்டோபரில் அவர் மீண்டும் அமெரிக்காவுக்குப் பயணமானார்.

*(அடுத்த அரங்கில் தொடரும்)*

# ஆர்ட்டிக் கடலை ஆராய்வதற்கு உதவும் வெள்ளைத் திமிங்கிலம்!

பரந்து- ஆழ்ந்து கிடக்கும் ஆர்ட்டிக் கடலின் ரகசியங்களை அறிய விஞ்ஞானிகள் புதிய வழியைக் கண்டுபிடித்துவிட்டனர்.

ஆர்ட்டிக் கடலில் அநாயசமாகத் திரியும் வெள்ளைத் திமிங்கலங்களைப் பிடித்து அவற்றில் சூழலை அவதானிக்கும் கருவிகளைப் (Sensors) பொருத்தி - தேவையான தகவல்களைப் பெறும் புதியமுறை தற்போது நடைமுறையாக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் புவிப் பௌதிகவியல் சங்கத்தின் (American Geo-Physical Union) தேவைக்காக இந்தத் தகவல்கள் திரட்டப்படுகின்றன.

ஆழ்கடலில் காணப்படும் வேகமான நீரோட்டங்களையும், வெப்பநிலை மாறறங்களையும் - சாதாரணமாகக் கப்பலிலிருந்தோ, சுழியோடியோ கண்டறிய முடியாதவற்றை - திமிங்கலங்களின் உதவியுடன் கண்டறிந்துவிட முடியுமென நம்பப்படுகிறது.



திமிங்கிலங்களின் பாதை பின் தொடரப்படுகிறது.

இதுவரை காலமும் குளிர்ந்ததாக இருந்த ஆர்ட்டிக் சமுத்திரம், அண்மைக்காலமாகச் சூடாகிவருவது பற்றியும் இதனூடாக ஆராய்வதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

இதற்காக - செய்மதித் தொடர்புள்ள 'Conductivity - Temperature-Depth (CTD) Loggers' என்னும் கருவி தற்போது மூன்று வெள்ளைத் திமிங்கலங்களுக்குப் பொருத்தப்பட்டிருக்கிறது.

இதன் மூலம் கிடைத்த முதற்கட்டத் தகவல்களில் - ஆர்ட்டிக் சமுத்திரத்தில் குளிராக, மத்திமமான, சூடான நீர்ப்பரப்புக்கள் ஒன்றின்மேல் ஒன்றான படைகளாகக் காணப்படும் இயற்கை அதிசயமும் கண்டறியப்பட்டிருக்கின்றது. இதற்குத் தேவையான திமிங்கிலங்களை எவ்வாறு பெறுவதெனக் கூறும் நோர்வே நாட்டைச் சேர்ந்த விஞ்ஞானியொருவர்- கரையோரங்களை அண்டிவரும் இந்த 'பெலுகாஸ்' என அழைக்கப்படும் திமிங்கிலங்களை இலகுவில் வலைபோட்டுப் பிடித்துவிடலாம் எனச் சாதாரணமாகக் கூறுகிறார்.

# மைக்ரோ வேவ்ஸ் செய்யும் போர்ச் சாகசம்!

அமெரிக்க விமானப்படை மிக நவீனமாக 'நுண்ணலைத் தாக்குதல கருவியை' (High - Powered Microwave - HPM) உருவாக்கியுள்ளது.

இந்தக் கருவியின் மூலம் மில்லியன் வாற்ஸ் திறனுடைய அலைகளை உருவாக்கி அவற்றை குறிதவறாது தொடுப்பதன் மூலம் - விமானங்களையும், ஏவுகணைகளையும் தாக்க முடியும்.



சோதனை நடக்கவிருக்கும் ஆளில்லா விமானம்.

இந்த அலைகள் - மின்னியல் கருவிகளையும் கணனிகளையும் உடனடியாகவே செயலிழக்கச் செய்துவிடுவதால் - மனித அழிவுகளைத் தடுத்துவிட அல்லது குறைத்துவிட முடியுமென விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

ஏவுகணைகளும் இனித் தப்பாது.



இந்தக் கருவியின் தாக்குதல் திறனை - ஆளற்ற விமானங்களிலும, ஏவுகணைகளிலும் பரிசோதித்துப் பார்க்க ஏற்பாடுகள் நடக்கின்றன.

இதனை ஈராக்கிற்கு எதிரான யுத்தம் ஆரம்பிக்கப்பட்டால் - அதில் பயன்படுத்தலாம் என்பதே அமெரிக்க விமானப் படையினரின் பாரிய எதிர்பார்ப்பாகும்.

பார்த்தீர்களா...? தாக்குதல் கருவிகளை சோதிக்கவே ஒரு யுத்தம் தேவைப்படுகிறது என்பது எவ்வளவு கொடூரமானதென்று...!

## பல்சுவைச் சிதறல்
பல்சுவை அரங்கு

# வீரருக்கோ விளையாட்டு....! குத்து வாங்கும் காளைக்கு....?

ஸ்பெயின் நாட்டில் - பல்மா டீ மலோர்காவில் (Plama de Mallorca) நடந்த மயிர்க்கூர்ச்செறியும் காளை அடக்கும் போட்டியில் இடம்பெற்ற சில புகைப்படப் பதிவுகள் இவை.

வாட்களாலும், கத்திகளாலும் - சினங்கொண்ட காளையைக் குத்திச் சாய்ப்பவரே வெற்றி பெற்றவராவார். இங்கு அதற்கான முயற்சிகள் நடக்கின்றன.

ஒருபுறம் விளையாட்டென்று இதை எடுத்துக் கொண்டால்- மறுபுறம் அந்த வாயில்லா மிருகம் படும்பாட்டை எப்படிச் சொல்வது...





# திரை விமர்சனம்

## சாமுராய்



விக்ரம் ஒரு சிறிய நகரத்திலிருக்கின்ற பாடசாலை ஆசிரியர். அப்பாவியாகத் திரியும் இவருக்குப் பின்னால் ஒரு மர்மமும் இருக்கிறது. ஊழல் அரசியல்வாதிகளை வேட்டையாடும் இவரது மறுபுறத்தில் சிதைந்துபோன ஒரு அழகான காதல் கதை.

விக்ரமின் காதலியாக வரும் ஜெயா சீல் அற்புதமாக நடிக்கிறார். பின்னர் தற்கொலை செய்து காணாமற் போகிறார். கதையோட்டம் இவ்வாறு நகர அமைச்சரின் மகளான அனிதா விக்ரம் மீது காதல் கொள்கிறார். தந்தையோ ஊழல் பேர்வழி.

பிறகென்ன... அமைச்சர் நாஸர் விக்ரமால் கடத்தப் படக் கதை கிளைமாக்சுக்குச் செல்கிறது.

விக்ரமின் நடிப்பில் மெருகு இருக்கிறது. அவருக்கே பொருத்தமான பாத்திரப் படைப்பு.



புதிய இயக்குநரான பாலாஜி சக்திவேலுக்கு இது முதல் படம். இன்னமும் நன்றாகச் செய்திருக்க லாம். ஒளிப்பதிவு மட்டும் பல இடங்களில் பாராட்டைப் பெறு கிறது.

ஆனால், இறுதிக் கட் டத்தில் நீதிமன்றக் காட்சி - கதாநாய கனின் முட்டாள்தனமான பாத்தி ரப் படைப்புக்குச் சான்றாகிறது. நீதிமன்றம்- மேடையாகி விட்டாற் போல வசன மழை.

அதேபோலச் சண்டைக் காட்சிகளும் யதார்த்தத்திற்கு மீறிய தாய் அங்குமிங்கும் பறந்து தாக்கும் இவரைப் போல நூறு பேர் இருந்தால் - நானூறு பேரைச் சமாளித்துவிடலாமென்றே மனம் கணக்கிடுகிறது.

-நிஷா.

# பொனொபோ சிம்பன்சிகளின் சமூக வாழ்க்கை



சிம்பன்சிக் குரங்குகள் - மனித இனத்துக்கு மிக நெருங்கிய தொடர்புடையவை என்பதுடன் - அவை மனிதர்களைப் போலவே சமூக உறவுகளை வலிமையாகப் பேணுபவையும் ஆகும்.

இங்குள்ள பொனோபோ வகைச் சிம்பன்சிகள் (Bonobo, Pygmy Chimpanzee) - 40 வருடங்கள் வாழ்க்கைக் காலம் கொண்டவையாகும்.

இவற்றில் ஆண்கள் 39 கிலோகிராம் நிறையும், பெண்கள் 33 கிலோகிராம் நிறையும் சராசரியாகக் கொண்டவை.

பொதுவாகச் சிம்பன்சிகளுக்கே உரித்தான உடல் வடிவமைப்போடு - மெல்லிய, நீண்ட கால்களையும், ஒடுங்கிய முகத் தையும் கொண்டிருப்பது இவற்றின் விசேட தன்மை.



ஆபிரிக்காவின் கொங்கோ ஆற்றுப் பகுதியில் மிகக் குறுகிய நிலப்பரப்பில் வாழும் இவை - பழங்களையும், இலைகளையும், சிறிய பூச்சிகளையும் விரும்பி உண்கின்றன.

20 இற்கும் மேற்படாத எண் ணிக்கையில் குழுக்களாக வாழும் இவை - தமது குழு வைத் தவிர வேறு குழுக்களை - தமது எல்லைக்குள் அனுமதிப்பதில்லை. தமது குழுக்களிடையே பாலியல் தொடர்புகளை வைத்து இனத்தைப் பெருக்குவதும் இவற்றின் சிறப்பியல்பு.



# உங்களுக்கிருக்கிறதா — மனமுதிர்ச்சி?

சரீரத்தில் வளர்ந்து முதிர்ந்தாலும் மனமுதிர்ச்சி பெறவில்லையேல் குடும்பவாழ்வில் பல பிரச்சினை உருவாக இடமுண்டு. மனமுதிர்ச்சி பெற்றவரில் பின்வரும் குணங்களைக் காணமுடியும்.

1. யதார்த்தத்தை ஏற்கக்கூடிய மனநிலை இருக் கும். தன்னைப்பற்றி, மற்றவரைப்பற்றி, சூழலைப்பற்றி, பெற்றோரைப்பற்றிய உண்மைநிலையை ஏற்கக்கூடிய வராக இருப்பர். தான் கறுப்பா, சிவப்பா?, உயரமா, கட்டையா? எந்த நிலையோ அதை அப்படியே ஏற்கக் கூடிய மனப்பக்குவம் இருக்கும். தனது உயரம் 5 அடியானால் 7 அடி என்று கூறத்தேவையில்லை. சூரியனில் இருந்து தூரமாகத் தூரமாக எமது நிழல் நீளமாகிக்கொண்டிருக்கும். ஆகவே மனமுதிர்ச்சி பெற்றவர் யதார்த் தத்தை அப்படியே ஏற்பார். யதார்த்தத்தில் இருந்து தூர மாகிப் போகமாட்டார். எமது நிழல், எமது உருவம் அல் லவே. இறைவனை நெருங்கும் அளவுக்கு யதார்த்தத்திற்கு முகம் கொடுப்போம். நாம் யதார்த்தத்தை அறிந்து செயற் படும்போது மற்றவர் மாறத் தொடங்குவர். சிறுவர்கள் யதார்த்தத்தை ஏற்பதில்லை. அதனால் தமது சூழலை மாற்ற முயலுவர். ஒருநாள் அடையாள அட்டைக்கு விண்ணப்பிப்பதற்காகத் தபா லகம் சென்றார் ஒரு மாணவி. அங்கு தபாலதி பர் விண்ணப்பப்படிவத்தில் நிறம் கறுப்பு என எழுதி விட்டார். இதனைப் பொறுக்காத மாணவி இனிமேல் நான் தபால் கந்தோ ருக்குப் போகமாட்டேன் என்றாள். இங்கு மன முதிர்ச்சியடையவில்லை என்பது புரிகிறது. தனது நிறம் கறுப்பானால் யதார்த்தத்திற்கு முகம் கொடுக் கக்கூடிய மனவளர்ச்சி தேவை.



2. மற்றவரில் மாற்றமுடியாத பழக்கங்கள் இருக்க லாம். மனமுதிர்ச்சியடைந்தவராலேயே அவருக்கு உதவ முடியும். மனமுதிர்ச்சி பெற்றவர் தன்னை மாற்றினால் மற்றவர் மாறுவார் என்று கூறுவார். மற்றவரால் வரும் கலக்கத்தைத் தாங்கிக்கொள்வார். மற்றவர் மாறா தவராக இருந்தாலும், அவருடன் சேர்ந்து வேலை செய்யக்கூடியவராக இருந்தால் மனமுதிர்ச்சி பெற்றவர் எனலாம். ஒருவர் இருக்கும் நிலையில் அவரை ஏற்றுக் கொண்டாலேயே அவரை மாற்ற உதவமுடியும். மன முதிர்ச்சி பெற்றவர் மற்றவரை இருக்கும்நிலையிலே ஏற்றுக்கொள்வார். சில குணங்களை மாற்றலாம். சில குணங்களை மாற்றமுடியாது. ஆகவே, மற்றவரை அவர் இருக்கும்நிலையில் ஏற்பது நன்று. நீ மாறினால் மட்டுமே சேர்ந்து வாழ்வேன் என்பது மனமுதிர்ச்சிக் குறைவை எடுத்துக்காட்டுவதாகும். மற்றவர் மாறிக்கொண்டு வரும்பொழுது அதைப்பாராட்டி, அவரால் ஏற்படும் வேதனையைச் சகித்துக்கொண்டு மனமுதிர்ச்சி பெற்ற வர் செயற்படுவார்.

3. மனமுதிர்ச்சி பெற்றவரிடம் பாதுகாப்புணர்வுண்டு. எந்த நேரமும் பாதுகாப்புணர்வில்லாது பயந்து கொண் டிருந்தால் அவர் மனமுதிர்ச்சி பெற்றவரல்ல. தொழில் செய்யுமிடத்தில், வீட்டில் மற்றவர்கள் மீது விசுவாசம் வைத்து நடக்கக்கூடியவராக மனமுதிர்ச்சி பெற்றவர் இருப்பார். எவரையும் நம்ப முடியவில்லையென்றால் அதற்கான காரணம் என்னிடம் இருக்கவேண்டும்.

4. சில மூடக்கொள்கைகளை எமது மனதில் பதித் துள்ளோம். குலத்தை முன்கொண்டு, இனத்தை முன் கொண்டு, மொழியை முன்கொண்டு, அந்தஸ்தை முன் கொண்டு சில எண்ணங்கள் எனது மனதில் பதிந்தி ருக்கும். ஒரு குடும்பத்தில் மூன்று பெண்பிள்ளைகள் இருந்தனர். அவர்களை அருகில் இருந்த வீட்டுப் பிள்ளைகளுடன் சேரவிடவில்லை. இவர்கள் தாழ்ந்த வர்கள் என்று கூறிப் பெற்றோர் தடுத்தனர். இப்படி வளர்ந்த பிள்ளைகள் திருமணம் முடித்து மூன்று பேரு டைய வாழ்விலும் மணமுறிவு ஏற்பட்டுவிட்டது. காரணம் மற் றவர்கள் தாழ்ந்தவர்கள் என்ற எண்ணத்தோடு திருமணவாழ்வு வாழும்போது கணவனை, மனைவியைத் தாழ்த்தியே எண் ணுவர். மற்றவரை மதிப்ப தில்லை. இது மனமுதிர்ச்சி நிலையல்ல.

5. அன்பு செய்யவும், அன்பு செய்யப்படவும் கூடியவராக மனமுதிர்ச்சியடைந்தவர் இருப் பார். சிலர் மற்றவரை அடிமைப் படுத்திச் சுதந்திரம் இல்லாது செயற்படுவர். மற்றவ ருக்குச் சுதந்திரம் கொடுப்பது எனது சுயாதீன நிலைக்குக் களங்கம் என நினைப்பர். இது மன முதிர்ச்சியடையாத நிலையைக் காட்டுகின்றது. மன முதிர்ச்சி யடைந்தவர் மற்றவருக்கு உதவி செய்தாலும் அவரை நிர்வகிக்க எண்ணமாட்டார். சிலர் சிறு உத வியைச் செய்து மற்ற வரை நிர்வகிக்கப் பார்ப்பர். இது மன முதிர்ச்சி நிலையல்ல. மன முதிர்ச்சி பெற்றவர் உதவி செய்யவும், உதவியைப் பெறவும் முன்வருவர். மன முதிர்ச்சி பெறாதவர் உதவியைப் பெற விரும்ப மாட்டார்.

6. மனமுதிர்ச்சி பெற்றவர் உடலுறவில் திருப்தி யைக் கொடுக்கவும், பெறவும் ஆயத்தமாக இருப்பார். தனது திருப்தியை மட்டும் மனதிற்கொண்டு செயற் படமாட்டார்.

7. தனது உணர்வுகளை அடக்கி வைக்காது உரிய விதத்தில் வெளிப்படுத்தக் கூடியவராக மனவளர்ச்சி பெற்றவர் இருப்பார். உணர்வு என்பது நல்லது கெட் டது என்று சொல்வதற்கில்லை. அதை உரிய விதத்தில் வெளிப்படுத்தவேண்டும். சிறிய நிகழ்ச்சிகளிலும், பெரிய நிகழ்ச்சிகளிலும் ஒரே விதத்தில் உணர்வை வெளிப் படுத்தாது, நிகழ்ச்சிக்கேற்ப வெளிப்படுத்தக் கூடியவராக இருந்தால் அவர் மனமுதிர்ச்சி பெற்றவராகும். சிறிய நிகழ்ச்சிக்கும் அழுது, பெரிய நிகழ்ச்சிக்கும் அதேபோல் அழுதால், சிறிய நிகழ்ச்சிக்கும் பெரிதாகக் கோபித்து, பெரிய நிகழ்ச்சியிலும் அதேவிதத்தில் கோபித்தால் அவர் மனமுதிர்ச்சி பெறவில்லை எனலாம்.

8. எனது உறுதிப்பாடு இதுதான். மற்றவரது உறவு உடைந்துவிடுமே என்று பயப்படாது தனது கருத்தை வெளிப்படுத்தக்கூடியவராக மனமுதிர்ச்சியடைந்தவர் இருப்பார்.

- எஸ்.ஜே.யோகராசா.

# இருட்டைக் கண்டு பயப்படுவது ஏன்...?



இருட்டு என்றாலே பயப்படுபவர்கள் பலர் இருக்கின்றனர். குறிப்பாகச் சிறார்களுக்கு இருட்டைக் காட்டிப் 'பூச்சாண்டி' காட்டுவது வழமை.

ஆனால் - இருட்டைக் கண்டு சிறார்கள் பயப்படுவதற்கான உண்மை யான காரணம் - அவர்களுக்குள்ள பார்வைக் குறைபாடே எனப் புதிய விளக்கம் கொடுக்கின்றனர் கிளாஸ்கோவிலுள்ள (Glasgow) - கார்ட்நவல் பொது வைத்தியசாலை (Gartnavel General Hospital) வைத்தியர்கள்.

இவர்களது ஆய்வு பிரிட்டிஷ் மருத்துவச் சஞ்சிகையில் (British Medical Journal) வெளியாகியுள்ளதன் பிரகாரம்-

சாதாரணமாக இருட்டுக்குள் நுழைந்தால், சற்று நேரத்தின் பின்னர் கண்கள் அந்த இருட்டைப் பழகிவிடும். ஆனால் - சிலருக்கோ அவ்வா றான இசைவாக்கம் நடைபெறுவதில்லை. அவர்களுக்கு இருட்டுத் தெளி வாவதில்லை. இத்தகைய பார்வை வலுக்குறைந்தவர்களே, இருட்டைக் கண்டு அதிகம் பயப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இருட்டைக் கண்டு பயப்படுவோருக்கு, உளவியல் காரணங்களோடு- இந்த விடயமும் மிக முக்கியமானது என்கிறார் - இந்த ஆய்வைச் செய்த வைத்தியர் குழுவுக்குத் தலைமை தாங்கிய கண் வைத்திய நிபுணர் (Opthalmologist) கோர்டன் டட்டன் (Gordan Dutton).

# வாரம் ஒரு யோகாசனம்

**01. சித்தாசனம்**



கற்றுத்தருபவர்
**மா.மகாநேசன், கரவெட்டி.**

முதலாவது சித்தாசனம். இதைச் செய்யும் விதம் சமமான தரையில் நீள மான விரிப்பை விரித்து அதில் இருந்து கால்களை நீட்டி வலது காலை மடக்கி குதியை மூலத்திற்கும் மர்மத் தானத் திற்கும் இடையில் வைத்து இடது காலை வலது குதிக்காலுக்கு மேல் வைத்து நிமிர்ந்து இருக்க வேண்டும். மனதை ஒருநிலைப்படுத்தி இருக்க வேண்டும்.

***சித்தாசனத்தின் நன்மைகள்***

சுத்தமாக இரத்தம் இறுக்கமடைகி றது. பிரம்மச்சாரியத்திற்கும் நன்மையளிக்கின்றது. சித்தாசனத்தை முதலாரம்பத்தில் ஒரு நிமிடம் இருந்தால் போதுமானது. பின்னர் படிப்படி யாக ஐந்து நிமிடம் இருந்தால் போதுமானது. நான்கு ஆசனங்களிலும் சிறந்த ஆசனம் சித்தாசனமே ஆகும். இவ்வாசனங்களைச் சாதாரணமாக இதைப் பயிலுவதால் உடலுக்குள் உள்ள 72 ஆயிரம் நரம்புகளும் தூய்மை பெறுகின்றன. உடலில் மிகுந்துள்ள சூட்டைத் தணிக்கும். பல நோய்களையும் தீர்க்கும்.

(தொடரும்)

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு

கண்ணோட்டம் இல்லவர் கண் இலர்-
கண்உடையார்
கண்ணோட்டம் இன்மையும் இல். - திருக்குறள்-

## நமது நோக்கு

### இழந்தோமாயின் அழிவோம் !

அரச கரும மொழிக்கான அந்தஸ்தைப் பெற்றிருந்தும் - தமிழ்மொழியைச் சீராக நடைமுறைப்படுத்துவதில் அரசாங்கம் முழுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளாமலிருப்பதை இம்முறை வெளிநாடொன்று சுட்டிக்காட்ட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

தமிழ்மொழியை அமுலாக்குவதில் வெறுமனே சட்டத்தை மட்டும் எழுத்துக்களில் வடித்துவிட்டு, அதனைச் செயற்பாட்டில் கொண்டு வருவதில் அசமந்தப்போக்கும் அலட்சியமும் தொடர்ந்து வருவதை நோர்வே நாட்டு இராஜதந்திரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதனையடுத்து - தமிழ்மொழி பயிற்சித் திட்டங்களை நாடளாவிய ரீதியாக, பல்வேறு மட்டங்களிலும் நடைமுறைப்படுத்துவதற்கு வேண்டிய நிதியுதவியைச் செய்யவும் நோர்வே முன்வந்திருக்கிறது. நோர்வேயின் இந்த முயற்சியைப் பாராட்டும் அதேவேளை -

தெற்கில் மட்டுமல்ல, தமிழர் தாயகமான வட-கிழக்குப் பகுதிகளில் கூட தமிழ்மொழியை நடைமுறைப்படுத்துவதில் காட்டப்படும் அலட்சியப் போக்கு தீவிரமடைவதை வேதனையுடன் நோக்க வேண்டியிருக்கிறது.

வட-கிழக்கிலுள்ள அரசாங்கத் திணைக்களங்கள், பொலிஸ் நிலையங்கள், நீதிமன்றங்கள் எனப் பல்வேறு பகுதிகளிலும் தமிழ்மொழி அமுலாக்கம் இன்னமும் கைக்கொள்ளப்படாததை பலரும் நியாயமான கோபத்துடன் எடுத்துச் சொல்கின்றனர்.

ஈழத்தமிழர்களின் கலாசார, பண்பாட்டுத் தலைநகரான யாழ்ப்பாணத்தில் - தனது வீடு இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டிருப்பதை பதிவதற்காக அரச செயலகத்திற்குச் சென்ற தமிழபிமானி ஒருவர் - தனக்கு வழங்கப்பட்ட விண்ணப்பங்கள் ஆங்கிலத்திலிருந்ததை மனக்கவலையுடன் தெரிவித்தார்.

குடாநாட்டிலுள்ள பொலிஸ் நிலையங்களிலோ - தமிழில் புகார்களைப் பதிவதற்கான ஏற்பாடுகள் இன்னமும் மேற்கொள்ளப்படவில்லையென அனைவருமே குறைகூறுகின்றனர்.

தமிழர் தாயகத்தின் நிர்வாகத் தலைநகரான திருகோணமலையில் - பொலிஸ் பதிவுகளோடு நீதிமன்ற நடவடிக்கைகளும் தனிச் சிங்களத்திலேயே நடைபெறுவதாக - திருமலை மாவட்ட சட்டத்தரணிகள் சங்கம் - மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் நேரடியாகப் புகார் செய்திருக்கிறது.

இந்த விடயங்கள் தொடர்பாக அரசாங்க உயரதிகாரிகளாகப் பணியாற்றும் தமிழர்களிடம் விழிப்புணர்வு வரக்காணவில்லை என்பதோடு, இதனை ஒரு பிரச்சினையாகவே எண்ணாத அவர்களின் மனோபாவம் - அலட்சியங்களையும் அசமந்தப் போக்குகளையும் இன்னமும் வேரூன்றச் செய்யக் காரணமாகி வருகின்றது.

எமது நாடாளுமன்ற உறுப்பினர்களும் - இந்த விடயத்தில் காலத்திற்குக் காலம் உரத்துக் குரலெழுப்புவதாகக் காட்டியபோதும் - தமிழ்மொழி அமுலாக்கத்தைச் சரிவர நடைமுறைப்படுத்த, செயலாற்றல் மிக்க முடிவுகளைப் பெறத் திராணியற்றவர்களாகவேயுள்ளனர்.

தமிழ்மொழியை அமுலாக்குவதில் சிரத்தை காட்டாத அரசாங்கத்தின் குற்றத்திற்கு சற்றும் சளைக்காததாகவே - அதனை எதிர்க்காத, தடுப்பதற்கு தமது முழு வலுவையும் காட்டிப் போராடாத, முழுமையான வீச்சுடன் ஆணித்தரமாக வாதாடாத தன்மைகளும் இருக்கின்றன என்பதைச் சம்பந்தப்பட்டவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

அண்மையில் வவுனியாவில் நடைபெற்ற தமிழ்க்கூட்டமைப்பின் பிரதான கட்சியொன்றினது செயற்குழுக் கூட்டத்தின் அறிக்கை முற்றுமுழுதாக ஆங்கிலத்திலேயே தயாரிக்கப்பட்டு ஊடகங்களுக்கு அனுப்பப்பட்டதும்,

அதன் தமிழ்மொழியாக்கம் எங்கே எனக் கேட்டதற்கு - அது இனித்தான் செய்யப்பட வேண்டும் எனப் பதிலளிக்கப்பட்டதும் - தமிழ்மொழிக்காக எமது அரசியல்வாதிகள் எவ்வளவு தூரம் குரலெழுப்பக் கூடியவர்கள் என்பதைப் பட்டவர்த்தனமாக எடுத்துக் காட்டியது.

இவை ஒருபுறமிருக்க - தமிழர்கள் மீதான ஒடுக்குமுறைகளில் வலுவான இடத்தைப் பிடித்திருந்த தமிழ்மொழியின் புறக்கணிப்பும், சிங்களமொழியின் ஆக்கிரமிப்பும் - இன்னமும் ஏதோ ஒரு வகையில் தொடர்வதை அனுமதிக்க முடியாதென்பதைத் தெளிவாக எடுத்துச் சொல்லவேண்டிய உடனடித் தேவை எமக்கு எழுந்திருக்கிறது.

போரியல்ரீதியான ஆக்கிரமிப்பும் தாக்குதலும் உடல், உள, பொருளாதார ரீதியான பாதிப்புக்களுக்குச் இட்டுச்சென்றுவிடுமென்றால் - மொழி ரீதியான ஆக்கிரமிப்பு எமது அடித்தளத்தையே, எமது அடையாளத்தையே - சிதைத்துவிடும், அழித்துவிடும் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

# பாதுகாப்பு நிதி ஒதுக்கீடு குறையாது; இராணுவ வலுவும் பாதிக்கப்படாது!

## படையினருக்கு அமைச்சர் பீரிஸ் உறுதிமொழி

(கொழும்பு)

இராணுவத்தின் வலுவைக் குறைக்கும் முயற்சிகளில் அரசாங்கம் ஈடுபடாதென்றும், அரசியல் தீர்வு ஒன்று எட்டப்படுவதற்கு முன்னர் விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கைவிட வேண்டுமென்று அரசாங்கம் கோருமென்றும் அமைச்சர் ஜி.எல். பீரிஸ் இராணுவத்தினருக்கு உறுதியளித்துள்ளார்.

மின்னேரியாவில் இராணுவத்தளத்தில் நடைபெற்ற அமைதிப் பேச்சுக்கள் பற்றிய விசேட கலந்துரையாடலில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் தொடந்தும் பேசும்போது,

இராணுவத்தினரின் வலிமையைக் குறைக்கும் விதமாக பாதுகாப்புக்கான நிதி ஒதுக்கீட்டில் நிதிக்குறைப்பு ஏதும் செய்யப்படமாட்டாது

அமைதிப் பேச்சுக்களைக் குழப்பவும் படையினரின் மனோபலத்தைச் சிதைக்கவும் சில குழுக்கள் முயன்று வருகின்றன.

ஆனால், அரசாங்கம் படையினருக்கான முக்கியத்துவத்தையும் அவர்கள் பற்றிய முழுமையான, தெளிவான விழிப்புணர்வையும் கொண்டிருக்கிறது.

அரசியல் தீர்வு என்பது எத்தகையதொரு தீர்வென்றும் அர்த்தமாகிவிடாது. நாட்டின் இறைமையையும் பிரதேச ஒருமைப்பாட்டையும் காப்பதாகவே எத்தீர்வும் அமையும். அதிகாரப் பரவலாக்கல் அவசியமானது, ஆனால் - ஒரே நாட்டில் இரண்டு இராணுவங்கள் இருக்க முடியாது. ஆனால் - பொலிஸாரைப் பொறுத்தவரை சூழ்நிலை வித்தியாசமானது.

வரவு செலவுத் திட்டம், நிதிக் கொள்கைகள், வெளியுறவு விவகாரம், பாதுகாப்பு விடயங்களில் திட்டமிடுதலும் அமுலாக்கலும் என்பன மத்திய அரசின் கீழேயே இருக்கும். இதனடிப்படையிலேயே அரசியல் தீர்வை நோக்கி அரசாங்கம் செல்கிறது.

அமைதிப் பேச்சுக்கள் முறிவடைந்துவிடுமோ அல்லது அதிருப்தி ஏற்பட்டு விடுமோ என்பதற்காக விடுதலைப் புலிகள் கேட்கும் எல்லாவற்றையும் ஏற்றுக்கொள்ளும் கொள்கையை அரசாங்கம் கடைப்பிடிக்கவில்லை என்றார்.

இக்கூட்டத்தில் மின்னேரியா தளத்தின் பொறுப்பதிகாரி பிரிகேடியர் எஸ்.ஆர்.பாலசூரிய, பிரிகேடியர் டபிள்யூ. ஜி.எம்.கே.ஆர். பெரேரா, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.கே. சவன்கன், கேணல் எஸ்.டபிள்யூ. ஜி. டோலகெல, கேணல் ஜே.பத்திரன உட்பட திருமலை,மின்னேரியாவிலுள்ள பிரிகேட்களைச் சேர்ந்த இராணுவத்தினர், விமானப் படையினர், கடற்படையினர், பொலிஸார் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# கவனிப்பாரற்ற நிலையிலுள்ள இடம்பெயர்ந்தோர் முகாம்கள்

(யாழ்ப்பாணம்)

பலாலி, மயிலிட்டி, காங்கேசன்துறைப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து மானிப்பாய், இன்பருட்டிப் பகுதிகளில் - இடம்பெயர்ந்தோர் நலன்புரி முகாம்களில் வசித்துவரும் பொது மக்கள் பெரிதும் பாதிப்புற்று வருகின்றனர்.

நீண்டகாலமாக அகதி முகாம் வாழ்க்கையை அனுபவிக்கும் இம் மக்களிற்கு, எந்தவொரு அரசசார்பற்ற நிறுவனமும் உதவவில்லை எனக் கவலை தெரிவிக்கும் அம்மக்கள் தங்கியிருக்கும் கொட்டகைகள் மிகவும் மோசமாகக் காணபடுகின்றன. இக்கொட்டகைகளையாவது மீளமைக்க அரசாங்கமோ அல்லது அரச சார்பற்ற நிறுவனமோ கிடுகுகளையாவது தந்துதவுமா என இம்மக்கள் ஏக்கத்துடனுள்ளனர். (9)

# பொருத்தமான சமஷ்டியை உருவாக்க சுவிற்சர்லாந்து அரசாங்கம் உதவும்!

## அந்நாட்டு வெளியுறவுத் திணைக்களத் தலைவர் அறிவிப்பு

இலங்கைக்குப் பொருத்தமான சமஷ்டி அமைப்பை உருவாக்குவதற்கும், கண்ணிவெடிகளை அகற்றுவதற்கும், அமைதிப் பேச்சுக்கள் பற்றி மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தவும் சுவிஸ் அரசாங்கம் உதவத் தயாராக இருப்பதாக - அந்நாட்டு வெளிவிவகாரத் திணைக்களத்தின் தலைவர் திருமதி மிக்கெலின் கால்மி தெரிவித்தார்.

தலைநகர் பேர்னில், அமைச்சர் ஜி.எல்.பீரிஸுடன் நடாத்திய சந்திப்பொன்றில் அவர் இதனைக் கூறினார்.

அமைதிப் பேச்சுக்கள் பற்றி மிகுந்த மகிழ்ச்சி தெரிவித்த கால்மி - இறுதி முடிவுக்கு இரு தரப்பும் இணைந்து தீர்வு காண்பதற்கு வாழ்த்தைத் தெரிவித்தார்.

இச்சந்திப்பின்போது - இலங்கையில் முதலீடுகள் செய்ய சுவிஸ் முன்வரவேண்டுமென அமைச்சர் பீரிஸ் கேட்டுக்கொண்டார். வீதிகள் அமைப்பு, தொலைத்தொடர்பு, சக்தி, நீர்ப்பாசனம் ஆகிய துறைகளிலுள்ள உட்கட்டுமான அபிவிருத்திப் பணிகளுக்கு சுவிசுற்சர்லாந்து உதவ முடியுமெனவும் அவர் கூறினார்.

# தமிழ்மக்களை அடிமைகளாகக் கருதும் விசேட அதிரடிப்படையின் அதிகாரிகள்

## அம்பாறை மாவட்ட எம்.பி. குற்றஞ்சாட்டுகிறார்

(அம்பாறை)

விசேட அதிரடிப்படை அதிகாரிகள் சிலர் இன்னமும் தமிழ் மக்களை அடிமைகளாகக் கருதித் துன்புறுத்தி வருவதாக அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திரநேரு குற்றஞ்சாட்டியுள்ளார்.

அண்மையில் அம்பாறை மாவட்டத்திலுள்ள ஊறணிப் பகுதியிலுள்ள கனகர் கிராமத்தைச் சேர்ந்த முருகுப்பிள்ளை சொக்கலிங்கம் என்பவர் விசேட அதிரப்படையினரால் தாக்கப்பட்டுள்ளார்.

விடுதலைப் புலிகளுக்கு உதவி செய்து வருவதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு இவர் தாக்கப்பட்டார். சம்பந்தபட்ட நபர், இச்சம்பவம் பற்றி அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருக்குத் தெரியப்படுத்தியதையடுத்து, அவர் விசேட அதிரடிப்படையின் மாவட்டப் பொறுப்பதிகாரி மற்றும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு ஆகியோருக்கு இதுபற்றிப் புகார் செய்துள்ளார்.

தொடர்ச்சியாகக் கிழக்குப் பகுதியில் வாழும் தமிழ்மக்கள் - விசேட அதிரடிப்படையினரின் தாக்குதல், சித்திரவதைகள் மற்றும் பலவந்தமான வேலைகள் ஆகியவற்றுக்கு உட்படுத்தப்பட்டு வருவதாகவும் சந்திரநேரு எம்.பி யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் தெரிவித்த புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மானிப்பாய் இடிகுண்டு நீரூற்றை புனரமைப்புச் செய்யக் கோரிக்கை

மானிப்பாய் மேற்குப் பகுதியிலுள்ள இடிகுண்டு நீரூற்றை புனரமைப்புச்செய்து, அதனை இப்பகுதியிலுள்ள மேட்டுக்காணிகளில் விவசாய நீர்ப்பாசனத்திற்குப் பயன்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று, மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளனம், யாழ்.கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளரைக் கடிதம் மூலம் கோரியுள்ளது.

இந்நீரூற்றைப் புனரமைப்புச் செய்வதன் மூலம், அதனைச் சூழவுள்ள பல விவசாயிகள் பயன்பெறுவர். எனவே, இதனைப் புனரமைத்து நீர்த்தாங்கி மூலம் பம்புகள் இணைக்கப்பட்டு, இப்பகுதியிலுள்ள விவசாயக் காணிகளுக்கு நீர் பாய்ச்ச நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (100)

# சைப்பிரஸில் வேலைவாய்ப்பு பெற்றுக்கொடுக்க நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கையில் உள்ள இளைஞர், யுவதிகளுக்கு சைப்பிரஸ் நாட்டில் அதிகளவு வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக தொழில் அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்திருக்கிறார்.

அண்மையில், தான் சைப்பிரஸ் நாட்டுக்கு விஜயம் மேற்கொண்டிருந்போது - அந்த நாட்டு அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியதை அடுத்தே, அந்த நாட்டில் இலங்கையருக்கு வேலைவாய்ப்பு வழங்குவது தொடர்பான ஒரு உடன்படிக்கை செய்ய வாய்ப்பு ஏற்பட்டுள்ளதென்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

சைப்பிரஸ் நாட்டில் தொழிற்சந்தையில் போட்டித்தன்மை அதிகமாக நில்வி வருவதால், அங்கு தொழில்புரிய விரும்புகிறவர்களுக்கு மூன்று பயிற்சி நிலையங்களை அமைக்கவிருப்பதாக அமைச்சர் மேலும் கூறினார்.

# அமெரிக்காவின் ஜனாதிபதிகளை உருவாக்கும்

# குடும்பப் பின்னணியும் இராணுவ பக்கபலமும்

கடந்த வாரக் கட்டுரையின் இறுதியில் அறிவுசார் சமூகம் அமெரிக்க காங்கிரசை எவ்வாறு கையாளுகின்றது என்பதனைப் பார்த்திருந்தோம்.



ஜிம்மி கார்ட்டர்

இன்றைய தொடரிலே அமெரிக்க சமஷ்டிகளினதும், அதேவேளை - அமெரிக்க அரசியற் கலாசாரத்தினதும் மணிமகுடமாக விளங்கும் ஜனாதிபதி முறைமையை - அமெரிக்க நாட்டிற்கே உரித்தான சமூக, பொருளாதார மற்றும் பண்பாட்டுச் சூழலிலே வைத்து நோக்கலாம்.

அமெரிக்க ஜனாதிபதிக்கான அதிகாரத்தினை அந்த நாட்டின் அரசியல் திட்டத்தின் அத்தியாயம் இரண்டு வரையறை செய்கின்றது. இதன் பிரகாரம்,

❖ நாட்டின் நிர்வாகம் ஜனாதிபதியிடம் நான்கு வருடங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

❖ முப்படைகளின் கட்டளைத் தளபதியாக விளங்குவதோடு, வெளிநாட்டு விவகாரங்களில், செனட் சபையின் ஆலோசனைகளுடன் ஒப்



ஆபிரகாம் லிங்கன்

பந்தங்களை மேற்கொள்ளவும் தூதுவர்களை நியமிக்கவும் அதிகாரமுள்ளது.

❖ கூட்டாட்சி பற்றிய தகவல்களைக் காலத்துக்குக் காலம் பிரகடனம் செய்வார்.

இவ்வாறான நிர்வாக அதிகாரங்களைக் கொண்டமைந்த ஜனாதிபதியை - அந்நாட்டின் தலைமை நிர்வாகியாகவே அமெரிக்க மக்கள் தீர்மானிக்கின்றனர்.

அரசியற் திட்ட வரையறைக்கு அப்பால் திறமையாகச் செயற்படக் கூடிய ஜனாதிபதிகள் •அமெரிக்க அரசியல் வரலாற்றில் இருந்திருக்கின்றனர். அரசியற் திட்ட அங்கீகாரத்திற்குப் புறம்பாக - அவர்களுடைய தனிப்பட்ட ஆளுமை மற்றும் சமூக, பொருளாதாரப் பின்புலம் அவர்களது திறன்மிகுந்த செயற்பாட்டை வழிநடாத்தியிருக்கிறது என்றும் கூறலாம்.

இந்த வகையில் - கடந்த நான்கு வாரத் தொடரிலே அமெரிக்கச் சமூகத்தின் வளர்ச்சியின் படிநிலைகளைப் பற்றியும், அதன் அசைவியக்கத்தினைப் பற்றியும் பார்த்திருக்கின்றோம். எனவே - அவற்றினை இங்கு மீளக்கூறாது, அமெரிக்கச் சமூகப் பின்புலத்திலே ஜனாதிபதி முறைமையிலமைந்த அரசியல் எவ்வாறு செயற்படுகின்றது என்ற ஆய்வை மட்டும் இன்று நோக்கலாம்.

அமெரிக்கத் தேர்தல்" என்றாலே எந்தக் கட்சிக்கு அதிக நன்கொடை கிடைக்கின்றதோ அந்தக் கட்சியின் வேட்பாளரே வெற்றி பெறுவர் என்பதனைக் கடந்த வாரம் பார்த்திருந்தோம். அந்த வகையில் ஜனாதிபதித் தேர்தலின்போதும் எந்த ஜனாதிபதிக்கு அதிக நன்கொடை - நலன் பேணும் குழுக்களால் கிடைக்கின்றதோ, அந்த ஜனாதிபதி வெற்றி பெறுவது திண்ணம். இவ்வாறு நலன பேணும் குழுக்களை வெல்வது எவ்வாறு என்பது ஜனாதிபதி வேட்பாளருக்கு நிச்சயம் தெரிந்திருக்க வேண்டும்.

அமெரிக்காவில் நிர்வாக முறைமை சமஷ்டி முறைமைக்கூடாகப் பரந்துபட்டு இருக்கின்ற அதேவேளை - அமெரிக்காவினை ஆளும் தரப்பினர் "பிரமிட்" வடிவிலான ஒரு கட்டமைப்பில் - அதன் உச்சியில் காணப்படுவதையும் நாம் பார்க்கலாம்.

இதனால் அமெரிக்கச் சமூகத்தில் வெவ்வேறு தளநிலைகளிலும்- நலன்பேணும் குழுக்கள் தங்களது நலன்நோக்கிச் செயற்படக்கூடிய பின்னணியைக் கொண்டமைந்தும் காணப்படுகின்றன.

இவ்வாறான உயர் குழாத்தினர் செயற்பாடு - அது சமஷ்டியாக இருக்கலாம் அல்லது ஒற்றையாட்சியாக இருக்கலாம் - ஜனாதிபதி, நிறைவேற்று அதிகாரத்தினைக் கொண்டமைந்தவராகக் காணப்படுபவராயின், அந்நாடுகளில் தனிமனிதவாதமும் உயர்குழாத்தினரின் செல்வாக்கும் வரன்முறைகளுக்கு உட்படாததாகவே காணப்படும். இந்த வகையில் அமெரிக்க ஜனாதிபதி முறைமையானது - அமெரிக்க சமூக, பொருளாதார வரலாற்றில் இயல்பாகவே ஏற்படுத்தப்பட்ட ஒன்றாகக் காணப்படுகின்றது என்றால் அது மிகச் சரியானதே.

அமெரிக்க உயர்குழாத்தினருக்கான நலன்பேணும் குழுக்கள் மூன்று அடிப்படை நடத்தைகளை ஒரு ஜனாதிபதி வேட்பாளரிடம் எதிர்பார்க்கின்றார்கள்.

அவற்றில் முதலாவது விடயம்- வேட்பாளரின் நல்லொழுக்கம், இரண்டாவது- தேச நிர்மாணத்திற்கு வேண்டிய வினைத்திறன், மூன்றாவது - வேட்பாளருக்குப் பக்கபலமாக இருக்கும் புத்திஜீவிகளின் எண்ணிக்கையும் அவர்களின் முக்கியத்துவமும்.

இவற்றினை அடிப்படையாக வைத்துக்கொண்டே அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் நலன் பேணும் குழுக்கள் செயற்படுகின்றன.

அமெரிக்க ஜனாதிபதிகளின் தனிப்பட்ட வரலாற்றில் முன்பு நல்லொழுக்கம் கூர்மையாக கவனிக்கப்பட்டது. இதற்கு உதாரணமாக, முன்னாள் ஜனாதிபதி ரிச்சாட் நிக்ஸனது



ஜோர்ஜ் டபிள்யூ புஷ்

"வோட்டர்கேற் ஊழலை" குறிப்பிடலாம் - அதாவது நிக்ஸன் தனது இரண்டாவது தேர்தலின்போது தனது ஜனாதிபதி அதிகாரத்தினை வைத்துக்கொண்டு எதிர்க்கட்சி வேட்பாளரின் நடவடிக்கையினை ஒற்றுக் கேட்டதனால் பதவி விலகும் அளவுக்குச் சென்றதைச் சொல்லலாம்.

ஆனால் - தற்பொழுதிருக்கும் ஜனாதிபதிக்கு முன்னர் ஜனாதிபதியாக இருந்த பில் கிளின்டன் - தனது அந்தரங்கச் செயலாளரான



நீகன்

மொனிக்கா லெவென்ஸ்கியுடன் மேற கொண்ட முறைகேடான பாலியல் விவகாரம் உறுதிப்படுத்தப்பட்ட

## சுயநிர்ணயம் ~ ஒரு பார்வை

பகுதி 18

போதும் - பில் கிளின்டனது தேசநிர்மாண வினைத்திறனைக் (Skill of State Craftmanship) கருத்திலெடுத்து, அவர் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படாததனையும் நாம் இங்கு நோக்க வேண்டும்.

இந்த அடிப்படையில் முன்பி



ஜோர்ஜ் புஷ்

ருந்த மூன்று அடிப்படை நடத்தை முறைகளிலிருந்து - தற்பொழுது அமெரிக்க அரசியற் கலாசாரத்தில்- திறமையான வேட்பாளரும் அவருக்கு ஆலோசனை வழங்குவோரும் எவ்வாறு கொள்கைத் தீர்மானத்தினை உருவாக்கும்போது தமக்குச்

**வேலும்மயிலும் சேந்தன்**

சாதகமான முறையில் கொள்கை வகுப்பினை மேற்கொள்வர் என்பதிலேயே தற்போதைய நலன்பேணும் குழுக்கள் குறியாக இயங்குகின்றன.

இதற்கு அடிப்படை அம்சமாக இருக்கும் விடயமானது, இன்று உலகைத் தனியொரு வல்லரசாக ஆட்சிசெய்வது அமெரிக்கா என்பதால் - அதற்கு ஆட்சிசெய்வதற்கு வேண்டிய அடிப்படைத் திறமைகள் இருக்க வேண்டும் என நலன் பேண் குழுவினர் எதிர்பார்ப்பதேயாகும்.

அதேவேளை - அமெரிக்காவில் ஜனாதிபதியை மையப்படுத்தியே கொள்கை வகுப்பு மேற்கொள்ளப்படுவதால் - எந்தவொரு ஜனாதிபதியின் பின்னாலும் இருக்கும் - ஆலோசகர்கள், கொள்கை வகுப்பாளர்கள் அதிமுக்கியமானவர்களாகக் கருதப்படுகின்றனர்.

அமெரிக்க ஜனாதிபதிகளின் வரலாற்றில் - அவர்களது கொள்கை வகுப்பாளர்களது திறமையால் பெரிதும் விரும்பப்பட்ட ஜனாதிபதிகளாக ரூஸ்வெல்ட் மற்றும் நிக்ஸன் இருந்திருக்கின்றனர் என்பது ஒரு உபரித் தகவல்.

இவ்விரு ஜனாதிபதிகளது ஆட்சிக்காலங்களிலுமே - அமெரிக்கா, உலகில் பொருளாதார ரீதியாக வல்லரசாகத் தன்னை நிலைநிறுத்துவதற்கான அடிப்படைக் கட்டுமானத்தை அமைத்தது என்பது ஆய்வாளர்களது கருத்தாகும்.

அமெரிக்காவில் ஜனாதிபதி மூலமாகவே நிறைவேற்று அதிகாரம் செயற்படுவதால் - நான்கு அடிப்படைச் சமூகக் காரணிகளை ஜனாதிபதி வேட்பாளர் திருப்திப்படுத்தக் கூடியவராகவும், அதேவேளை - இந் நான்கு அடிப்படைச் சமூகக் காரணிகளில் குறைந்தளவு இரண்டு காரணிகளையாவது தன்னகத்தே கொண்டிருப்பவராகவும் அவர் இருக்க வேண்டும்.

அவையாவன - வேட்பாளரது தனிப்பட்ட குடும்பப் பின்னணி (Family culture), குறித்த வேட்பாளரை ஆதரிக்கும் சமூக நிறுவனங்கள் (Social Institutions), வேட்பாளரை ஆதரிக்கும் தனிமனிதர்கள் (வாக்குகளின் எண்ணிக்கைக்காக) (Individuals), நான்காவதாக - சமூகத்தின அடிமட்டத்திலிருந்து உயர்குழாத்தினர் வரைக்கும் இடையிலுள்ள இணைப்பாளர்களினதும் இணைப்பு நிறுவனங்களினதும் (Social Coaliational Institutions ) ஆதரவாகும்.

இவற்றில் தனிப்பட்ட குடும்பப் பினனணி என்னும்போது- அமெரிக்காவில் பலவினச் சமூகங்கள் குடியேறியபோதும் - சிறுபான்மையினர், கறுப்பினத்தவர்கள் ஜனாதிபதி வேட்பாளராக இருக்கமுடியாத சூழ்நிலை காணப்படுகின்றது. அதேவேளை- வேட்பாளரது குடும்பங்களும் எவ்வாறு அமெரிக்க சமூகத்தவருடன் ஒத்திசைவானவை என்பதும தேர்தலின்போது மறைமுகமாக உற்றுநோக்கப்படும் என ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

அடுத்து, வேட்பாளரை ஆதரித்து வரும் சமூக நிறுவனங்கள் எனும்போது - முக்கியமாக அரசியல் கட்சிகளைக் குறிப்பிட்டாக வேண்டும். பிரித்தானியாவைப் போல் தீவிர கட்சி அங்கத்தவர்களின் ஆதரவு தேவைப்படாதபோதும் - தேர்தல் பணிகளுக்கான குறைந்தபட்ச ஆதரவும், தேர்தல் பிரசாரத்தினை நடாத்துவதற்கான தொடர்பிணைப்பும் (Net Work), நிறுவன அமைப்பும் தேவைப்படுவனவாக இருக்கின்றன. மேலும் தேசிய எல்லைகள் கடந்த கம்பனி



நிக்ஸன்

களின் பங்களிப்பும் இங்கு முக்கியமானது.

(இக்கம்பனிகளது பங்களிப்புக்கள் பற்றி முன்னைய பகுதிகளில் ஆராயப்பட்டுவிட்டன.)

அடுத்ததாக - தனிமனிதர்களின் வாக்குகள் என்ற ரீதியில் - தற்பொழுது அமெரிக்கத் தேர்தலில், பொது மக்கள் வாக்களிக்கும் வீதம் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது மிகவும் குறைவானதாகும். இதனால் தற்பொழுது மக்களை வாக்களிக்கத் தூண்டும் தேவை அதிகமாக உள்ளது. தலைமைத்துவத்தினை கைப்பற்றுவதற்கு நிறைய ஆதரவாளர்களையும் ஜனாதிபதி வேட்பாளர் வேண்டி நிற்கின்றார். மக் கிறசர் பேன்ஸ் என்ற அமெரிக்க அறிஞர் இதுபற்றிக் கூறுகையில் Great Leadership Require Greater Followship (திறமையான தலைமைத்துவம் என்பது அதிகமான பின்பற்றுபவர்களைக் கொண்டிருக்க வேண்டும்)



கெனடி

எனக் குறிப்பிட்டமை இங்கு நோக்கத்தக்கதாகும்.

அதேவேளை, நான்காவதாகக் குறிப்பிடப்படும் அமெரிக்கச் சமூகத்தின் அடிமட்டத்திலிருந்து உயர் குழாத்தினர் வரை அனைத்து மட்டங்களையும் இணைக்கும் நிறுவனங்களின் (Social Coaliational Institutions) பங்கும் குறிப்பிடத்தக்கதா



பில் கிளிண்டன்

கும். குறிப்பாக அமெரிக்காவின் இரண்டு நிறுவனமயப்படுத்தப்பட்ட அமைப்புக்களை ஆய்வாளர்கள் இதற்கு வலுமிக்க உதாரணங்களாகச் சுட்டிக் காட்டுகின்றனர்.

இதன்படி - ஊடகத்துறையினரை முதலாவதாக குறிப்பிடும் அரசியல் ஆய்வாளர்கள் - அமெரிக்க அரசியலில் பொதுசன அபிப்பிராயத்தினை உருவாக்குவதில் ஊடகத்துறையினரது பங்களிப்பும், அவர்களது ஆதரவும் ஜனாதிபதி வேட்பாளருக்கு நிச்சயம் இருக்க வேண்டும் எனக்குறிப்பிடுகின்றனர்.

இரண்டாவது சமூக இணைப்பு நிறுவனமாக இராணுவத்தினரை ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். அமெரிக்காவில் மக்கள் எல்லோரும் கட்டாய இராணுவ சேவையில் அமர்த்தப்படுவதால், பொதுசன அபிப்பிராயத்தை உருவாக்கும் சமூக நிறுவனமாக இராணுவத்தினரும் காணப்படுகின்றனர்.

ஏனெனில் - அமெரிக்காவில் இராணுவம் மக்கள் மயப்பட்டதொரு அமைப்பாக விளங்கி வருகின்றது. எனவே - இராணுவம் மற்றும் பாதுகாப்புத்துறையின் மூலமாக பொதுசன அபிப்பிராயம் ஜனாதிபதி வேட்பாளருக்கு நிச்சயம் கிடைக்கக்கூடியதாகவே இருக்க வேண்டும். அமெரிக்க அனுபவத்தினை உற்று நோக்குமிடத்து - அமெரிக்காவின் பாதுகாப்பு துறையினர் மற்றும் இராணுவத்தினரே ஜனாதிபதிகளை தீர்மானிக்கும் சக்தியாக தேசிய எல்லைகளைக் கடந்த கம்பனிகளுக்கு அடுத்த நிலையில் இருப்பதையும் இங்கு அவதானிக்கலாம். இவ்வாறான சமூகப் பின்புலத்திலேயே அமெரிக்க அரசியல் கலாசாரம் அதன் தலைவர்களை உருவாக்குகின்றது.

(பிரதி செவ்வாய் தொடரும்.)



# ஐ.சி.சி. உலகக் கிண்ணம் - 2003

### ஸ்ரீபன் ஒகொஞ்சி டிக்கோலோ (அணித்தலைவர்)



*பிறந்தது:-* 25.06.1971 நைரோபி
*அணிகள்:-* சுவாம்பிபாலா ஸ்போர்ட்ஸ் கழகம். போர்டர் கென்யா
*சுருக்கமாக:-* ஸ்ரீவ் டிக்கோலோ
*ஒருநாள் ஆட்ட அறிமுகம்:-* 95/96 எதிர் இந்தியா
வலது கைத் துடுப்பாட்ட வீரர்
வலதுகை மிதவேகப் பந்துவீச்சாளர்.
இவர் இங்கிலாந்தின் வெல்ஷ்லீக் போட்டிகளில் சுவான்சீ அணிக்கு விளையாடியவர். 1990ல் தேசிய அணிக்குள் நுழைந்தவர். கூடியளவான ஓட்டம் வங்காளதேசத்துக்கு எதிராக 147 (ICC கிண்ணம் - 1997), இலங்கைக்கு எதிராக 96 (உலகக்கிண்ணப் போட்டிகளில் - 1996). திறமையான பந்துவீச்சாக 3-29 எதிர் இந்தியா 1990. கென்யா, இந்தியா, வங்காளதேச நாடுகளுக்கிடையில் நடைபெற்ற முத்தரப்பு ஒரு நாள் போட்டித்தொடரில் ஆட்டத்தொடர் நாயகன். சென்று விளையாடிய நாடுகள் - வங்காளதேசம், தெ.ஆபிரிக்கா, சார்ஜா, இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், மலேசியா.

### மொறிஸ் ஒமொண்டி ஒடும்பே



*பிறந்தது:-* 15.06.1969 நைரோபி.
*அணிகள்:-* ஆகாகான் ஸ்போட்ஸ் கிளப் கென்யா
*சுருக்கமாக:-* மொறிஸ் ஒடும்பே
*ஒருநாள் ஆட்ட அறிமுகம்:-* எதிர் இந்தியா 95/96
வலதுகைத்துடுப்பாட்ட வீரர்
வலதுகை OFF BREAK பந்து வீச்சாளர்.
அணியின் உபதலைவர். கென்யாவில் கடந்த வருடம் 25 உத்தியோகபூர்வ ஒருநாள் ஆட்டங்களிலும் விளையாடியவர். 1990ல் அறிமுகம். கூடிய ஓட்ட எண்ணிக்கை- 83 எதிர் இந்தியா. சிறந்த பந்துவீச்சு, 3-14 எதிர் மேற்கிந்திய அணி (1996). கடந்த உலகக் கிண்ண கென்ய அணித்தலைவர். இவர் சென்று விளையாடிய நாடுகள் - இந்தியா, மேற்கிந்தியா, இலங்கை, இங்கிலாந்து, பாகிஸ்தான், ஹொலண்ட், மலேசியா, வங்காளதேசம், தெ.ஆபிரிக்கா, நமீபியா.

### ஆசிப் யூசுப் கரீம்



*பிறந்தது:-* 15.12.1963 மொம்பசா
*அணிகள்:-* ஜவேரி விளையாட்டுக்கழகம் கென்யா
*சுருக்கமாக:-* ஆசிப் கரீம்
வலதுகைத் துடுப்பாட்ட வீரர்.
இடதுகை ORTHODOX
*ஒருநாள் ஆட்ட அறிமுகம்:-* எதிர் இந்தியா 95/96
1999 உலகக்கிண்ண அணித் தலைவர். இந்த உலகக் கிண்ணத்துக்கு முன்னதான 25 போட்டிகளிலும் தொடர்ந்து விளையாடியவர். 1980லேயே தேசிய அணிக்குள் நுழைந்தார். கூடிய ஓட்ட எண்ணிக்கை - 53 எதிர் சிம்பாப்வே (1997). ஒரு முறையில் 5 விக்கட் வீழ்த்திய முதல் கென்ய வீரன். 1996 உலகக் கிண்ணப் போட்டிகள் மற்றும் ICC. 1986,90,94,97 சுற்றுப்போட்டிகளில் விளையாடியவர். இவர் டேவிஸ் கிண்ண (ரெனிஸ்) அணித்தலைவராக இருந்ததும் ஒரு சிறப்பு.

### அல்பேஷ் வல்லப்தாஸ் வதேர்

*பிறந்தது:-* 7.7.1974 நைரோபி
*அணிகள்:-* பிரீமியர் கிளப் - நைரோபி
*சுருக்கமாக:-* அல்பேஷ் வதேர்
வலதுகைத் துடுப்பாட்ட வீரர்.
*ஒருநாள் ஆட்ட அறிமுகம்:-* எதிர் வங்காள தேசம் 97/98. 1999 உலகக்கிண்ண அங்கத்தவர். இவர் அணிக்குப் புதியவர். கூடிய ஓட்ட எண்ணிக்கை - 42 எதிர் வங்காளதேசம். விளையாடிய நாடுகள் - வங்காளதேசம், தெ.ஆபிரிக்கா, இந்தியா, மலேசியா, நமீபியா.

### ரவீந்து திராஜ்லால் ஷா



*பிறந்தது:-* 28.08.1972 நைரோபி
*அணிகள்:-* நைரோபி ஜிம் கானா, கென்யா.
*சுருக்கமாக:-* ரவீந்து ஷா
வலதுகைத் துடுப்பாட்ட வீரர். வலதுகை மிதவேகப் பந்து வீச்சாளர்.
*அறிமுகம்:-* 1998. கவர்ச்சிகரமான வலதுகைத் துடுப்பாட்ட வீரர். கூடிய ஓட்ட எண்ணிக்கை - 70 எதிர் இந்தியா (1998). சிறப்பான பந்துவீச்சு - 2/51 எதிர் இங்கிலாந்து A அணி. விளையாடிய நாடுகள் - தெ.ஆபிரிக்கா, இந்தியா, மலேசியா, நமீபியா.

### ஹித்தேஷ் சுபாஷ் மோடி



*பிறந்தது:-* 13.10.1971 கிசுமு
*அணிகள்:-* நைரோபி ஜிம் கானா. கென்யா
*சுருக்கமாக:-* ஹித்தேஷ் மோடி இடது கைத்துடுப்பாட்ட வீரர். வலதுகை OFF BREAK பந்து வீச்சு.
ஒருநாள் அறிமுகம் - எதிர் இந்தியா 95/96 உலகக்கிண்ணம். ஒரு மத்திய வரிசை துடுப்பாட்ட வீரர். கென்யாவிற்காக 92ல் ஆடத் தொடங்கியவர். 94,97 ICC கிண்ணப் போட்டிகள், 1996 உலகக்கிண்ணப் போட்டிகளில் விளையாடியவர். அதிகூடிய ஓட்டம்- 78 ஆ.இ எதிர் இலங்கை 1996.- தன் கழகத்தின் அணித்தலைவர். தெ.ஆபிரிக்கா, இந்தியா, வங்காளதேசம், மலேசியா, நமீபியா, இலங்கை ஆகிய நாடுகளில் விளையாடியவர்.

### பிரிஜல் ஜக்தீஷ் பட்டேல்.



*பிறந்தது:-* 14.11.1977 நைரோபி
*அணிகள்:-* பிரீமியர் கிளப் கென்யா
*சுருக்கமாக:-* பிரிஜல் பட்டேல்
வலதுகைத் துடுப்பாட்ட வீரர். இடதுகை ORTHODOX ஒருநாள் அறிமுகம் - எதிர் மே.இந்திய அணி 2001. திறமை நிறைந்த பந்து வீச்சாளர். முன்னாள் தேசிய அணி விக்கெட் காப்பாளர். தந்தையும் ஒரு கிரிக்கெட் வீரர். அவரின் திறமை மகனிலும் சுடர் விடும். மிகத் திறமையான களத் தடுப்பாளர். பிராந்திய அணிகளுடன் இந்தியா, தெ. ஆபிரிக்கா ஆகிய நாடுகளுக்கும் சென்று விளையாடியவர்.

## கென்யா அணி

### மார்ட்டின் ஆமொன் சுஜி



*பிறந்தது:-* 2.6.1971 நைரோபி
*அணிகள்:-* ஆகாகான் விளையாட்டுக்கழகம் கென்யா.
*சுருக்கமாக:-* மார்ட்டின் சுஜி
வலதுகைத் துடுப்பாட்ட வீரர். வலதுகை மிதவேகப் பந்து வீச்சாளர்.
*ஒருநாள் அறிமுகம்:-* எதிர் இந்தியா 95/96.
ஆரம்பப் பந்து வீச்சாளர். ரோனி சுஜியின் சகோதரர். அற்புதமான களத்தடுப்பாளர். 90ல் இருந்து தேசிய அணியில் இருப்பவர். 96ல் உலகக் கிண்ணப் போட்டிகளில் விளையாடியவர். 1990,94,97 ICC கிண்ணப் போட்டிகளில் விளையாடியவர். 1999 உலகக்கிண்ண அணி அங்கத்தவராக இருந்தவர். சென்று விளையாடிய நாடுகள் - இங்கிலாந்து, தெ.ஆபிரிக்கா, மலேசியா, இந்தியா, ஒல்லாந்து, இலங்கை, நமீபியா.

### ஒட்டினோ சுஜி ஒண்டிக்



*பிறந்தது:-* 5.2.1976 நைரோபி
*அணிகள்:-* ஆகாகான் விளையாட்டுக்கழகம் கென்யா
*சுருக்கமாக:-* டோனி சுஜி
வலதுகைத் துடுப்பாட்ட வீரர்.
வலதுகை மிதவேகப் பந்து வீச்சாளர்
*ஒருநாள் அறிமுகம்:-* எதிர் பாகிஸ்தான் 1996/97
மார்ட்டின் சுஜியின் இளைய சகோதரர். சிறந்த சகலதுறை விளையாட்டு வீரர். கூடிய ஓட்ட எண்ணிக்கை - 62 எதிர் சிம்பாப்வே 1997. ஏழாவது விக்கட் ஜோடியாக ஒருநாள் சாதனை 119 ஓட்டங்கள், 62 ஓட்ட எண்ணிக்கையுடன் தோமஸ் ஒடோயோவுடன் இணைந்து எடுக்கப்பட்டது. தெ.ஆபிரிக்கா, நமீபியா, இந்தியா, வங்காளதேச நாடுகளில் சென்று விளையாடியவர். 1999 உலக்கிண்ண அணியின் அங்கத்தவர்.

### தோமஸ் ஒடயோ மிகய்



*பிறந்தது :-* 12.5.1978 நைரோபி
*அணிகள்:-* நைரோபி ஜிம் கானா, கென்யா.
*சுருக்கமாக:-* தோமஸ் ஒடயோ
வலதுகைத் துடுப்பாட்ட வீரர். வலதுகை மிதவேகப் பந்து வீச்சாளர்.
*ஒருநாள் அறிமுகம்:-* எதிர் இந்தியா 1995/96
1996 உலகக்கிண்ண அணியில் மிகக்குறைந்த வயதினர். சகலதுறை ஆட்டவீரர். கூடிய ஓட்டம் - 54 எதிர் சிம்பாப்வே 97. சிறந்த பந்துவீச்சு - 3/25 எதிர் பாகிஸ்தான் 96. வங்காளதேசம், இந்தியா, இலங்கை, தெ.ஆபிரிக்கா, நமீபியா ஆகிய நாடுகளிலும் 1999 உலகக் கிண்ணப் போட்டியிலும் விளையாடியவர்.

### கெனடி ஒட்டினோ ஒபுயா



*பிறந்தது:-* 11.3.1972 நைரோபி
*அணிகள்:-* ஆகாகான் விளையாட்டுக்கழகம், கென்யா.
*சுருக்கமாக:-* கெனடி ஒட்டினோ
வலதுகைத் துடுப்பாட்ட வீரர். விக்கெட் காப்பாளர்.
ஒருநாள் அறிமுகம் - எதிர் இந்தியா 95/96
1999 உலகக்கிண்ண அணி அங்கத்தவர். இம்முறை உலகக் கிண்ண போட்டிகளுக்கு முன்னதாக 25 ஒருநாள் போட்டிகளிலும் விளையாடியவர். வலதுகை ஆரம்பத் துடுப்பாட்ட வீரர். நாட்டின் சிறந்த விக்கட் காப்பாளர். நாட்டுக்கான அறிமுகம் 1993. 1994,1997, ICC கிண்ணப் போட்டிகளில் விளையாடியவர். கூடிய ஓட்ட எண்ணிக்கை-144. எதிர் வங்காளதேசம் 1997. இந்தியா, தெ.ஆபிரிக்கா, இலங்கை, வங்காளதேசம், நமீபியா, மலேசியா, நாடுகளில் சென்று விளையாடியவர்.

### ஜோசப் ஒருல் அங்காரா



*பிறந்தது:-* 8.11.1971 நைரோபி
*அணிகள்:-* சுவாம்பிபாபா விளையாட்டுக்கழகம் கென்யா.
*சுருக்கமாக:-* ஜோசப் அங்காரா.
வலதுகைத் துடுப்பாட்ட வீரர். வலதுகை மிதவேகப் பந்துவீச்சாளர்.
*ஒருநாள் அறிமுகம்:-* எதிர் சிம்பாப்வே 97/98
மிகவும் உபயோகமுள்ள இளந்தலைமுறை விளையாட்டு வீரர். மலேசியா, தெ.ஆபிரிக்கா, சிம்பாப்வே, நமீபியா ஆகிய நாடுகளில் சென்று விளையாடியவர். 1999 உலகக் கிண்ண அணியின் அங்கத்தவர். தென்னாபிரிக்க கிரிக்கெட் அக்கடமியில் பயின்றவர்.

### பீற்றர் ஜிம்மி ஒங்கொண்டோ



*பிறந்தது:-*10.2.1977 நைரோபி
*அணிகள்:-* கென்யா
*சுருக்கமாக:-* பீற்றர் ஒங்கொண்டோ
வலதுகைத் துடுப்பாட்ட வீரர். வலதுகை மிதவேகப்பந்து வீச்சாளர்.
*ஒருநாள் அறிமுகம்:-* எதிர் தெ. ஆபிரிக்கா 1999/2000. மாற்று வேகப் பந்து வீச்சாளர். கீழ்வரிசை அதிரடி துடுப்பாட்ட வீரர். நமீபியாவில் நடைபெற்ற ஆபிரிக்கக்கிண்ணப் போட்டிகளில் விளையாடியவர் (1997). திறமையான பந்துவீச்சு - 2/20 எதிர் நொதன் டிரான்ஸ்வால் அணி.

### டேவிட் ஒலூச் ஒபுயா



*பிறந்தது:-*
14.08.1979 நைரோபி
*அணிகள்:-*
கென்யா
*சுருக்கமாக:-*
டேவிட் ஒபுயா
வலதுகைத் துடுப்பாட்ட வீரர்.
விக்கட் காப்பாளர்.
*ஒருநாள் அறிமுகம்:-*
எதிர் மே.இந்திய அணி 2001

### கொலின்ஸ் ஒமொண்டி ஒபுயா



*பிறந்தது:-* 27.7.1981 நைரோபி
*அணிகள்:-* கென்யா
*சுருக்கமாக:-* கொலின்ஸ் ஒபுயா அல்லது கொலின்ஸ் ஒமுண்டி
வலதுகைத் துடுப்பாட்ட வீரர்.
LEG BREAK சுழல் பந்து வீச்சாளர்
*ஒருநாள் அறிமுகம்:-*
எதிர் மே.இந்திய அணி 2001

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# வலைகளை கடலில் வீசிய கடற்படையினர்

# வடமராட்சியில் மீனவர் மீதும் தாக்குதல்!

# குற்றச்சாட்டை நிரூபிக்கவேண்டும் இல்லையேல் நீதிமன்றில் சந்திப்பேன்

## மகேஸ்வரனுக்கு சிறிகாந்தா எச்சரிக்கை

(கொழும்பு)

ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் அரசாங்கத்திடம் இருந்து நிதியுதவி பெறுவதாக அமைச்சர் மகேஸ்வரன் கூறியிருந்தார். இதனை ஆதாரபூர்வமாக அவர் நிரூபிக்க வேண்டும் எனப் பகிரங்கமாகச் சவால் விடுத்துள்ளார் ரெலோ இயக்கத்தின் முதல்வர் சிறிகாந்தா.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது,

சில தினங்களுக்கு முன்னர் எமது கட்சிக்கு எதிராக அமைச்சரினால் தெரிவிக்கப்பட்டிருந்த குற்றச்சாட்டு, இப்போது எமது கட்சித் தலைவரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் மீது நேரடியாகத் தொடுக்கப்பட்டுள்ளது.

இது மிகப் பாரதூரமான குற்றச்சாட்டு. கட்சி ஒன்றின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஒருவர் மீது அமைச்சர் ஒருவர் சுமத்தியிருக்கும் நிதி மோசடிக் குற்றச்சாட்டு ஆகும்.

இக்குற்றச்சாட்டினை மிகப் பாரதூரமான ஒன்றாகவே நாம் கருதுகின்றோம்.

இக்குற்றச்சாட்டினை தான் தெரிவிப்பதற்கு ஏதுவான, ஆதாரங் கள் என்ன? எவை? என்பதை அமைச்சர் பகிரங்கமாக அறிவிக்க வேண்டும்.

இன்றிலிருந்து இரண்டு வாரங்களுக்குள் இதனை அமைச்சர் மகேஸ்வரன் செய்தாக வேண்டும்.

அமைச்சர் இதனைச் செய்வாராக இருந்தால், எமது கட்சித் தலைவர் என்று கூடப் பாராமல், செல்வம் அடைக்கலநாதன் எம்.பியிடம் எமது கட்சித் தலைமைக் குழு விளக்கம் கோரும். அதனைத் தொடர்ந்து ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும்.

எனவேதான், ஆதாரங்களைப் பகிரங்கமாகச் சமர்ப்பிக்க முடியுமா? என அமைச்சருக்கு பகிரங்கச் சவாலாகவே விடுக்கின்றேன். ஆனால், எதிர்வரும் இரு வாரங்களுக்குள் தனது குற்றச்சாட்டுக்களை ஆதாரங்களை பகிரங்கப்படுத்த அமைச்சர் தவறுவாரேயானால், 'அவதூறு' விளைவித்த குற்றச்சாட்டு ஒன்றுககு நீதிமன்றத்தின் படிகளில் அவர் ஏறி இறங்க வேண்டியிருக்கும்.

தற்போது இந்தியா சென்றிருக்கும் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. இன்னும் சில தினங்களில் நாடு திரும்பியவுடன், அமைச்சரின் குற்றச்சாட்டுக்கு பகிரங்கமாகப் பதிலளிக்குமாறு நான் அவரைக் கோருவேன் என சிறிகாந்தா தான் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## யாழ்ப்பாணத்தில் புறூவ் ஹொவ்டே

(யாழ்ப்பாணம்)

இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவர் ஜெனரல் புறூவ் ஹொவ்டே நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்தார்.

காலை 11 மணியளவில் யாழ். அரசாங்க செயலகத்திற்கு சென்ற புறூவ் ஹொவ்டே, யாழ்.அரசாங்க அதிபர் செ. பத்மநாதனுடன் கலந்துரையாடல் நடாத்தினார்.

இதன்போது, யாழ்.மாவட்டத்தில் இடம்பெறும் போர்நிறுத்த மீறல்கள் குறித்தும் மற்றும் உயர்பாதுகாப்பு வலயங்கள் பற்றியும் கலந்துரையாடினார்.

இவர் இன்று கிளிநொச்சியில் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார் என கண்காணிப்புக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

## நான்கு மீனவர்களுக்கு ஆஸ்பத்திரியில் சிகிச்சை

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சிக் கடலில் மீன்பிடிக்கச்சென்ற நான்கு மீனவர்கள் மீது கடற்படையினர் தாக்குதல் நடத்தியுள்ளனர். தாக்குதலுக்குள்ளான நான்கு மீனவர்களும் வல்வெட்டித்துறை மாவட்ட அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுத் திரும்பினர்.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த வெங்கடாசலம் அருமைச்சந்திரன், குணம் சந்திரகுமார், ஜோசேப் பிரேமதாஸ், சின்னத்துரை ராஜேந்திரன் ஆகிய நால்வருமே வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று திரும்பியவர்களாவர்.

இந்த நான்கு மீனவர்களும் கடந்த 25 ஆம் திகதி கடலுக்குச் சென்று இரவு வலைகளை வீசிவிட்டு வள்ளத்தில் காத்திருந்த போது, அதிவேகப் படகில் வந்த கடற்படையினர் மீன் தருமாறு கேட்டிருக்கின்றனர்.

இப்போது மீன் தரமுடியாது என மீனவர்கள் கூறவே, ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான வலைகளை கடற்படையினர் வெட்டினர். இதனையடுத்து மீனவர்கள் கடலில் வீசப்பட்ட வலைகளை மீட்க முடியாமல் கரைதிரும்பினர்.

மறுநாள் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இழந்த வலைகளை மீட்பதற்காக நான்கு மீனவர்களும் சென்றபோது, அதி வேகப படகில் வேகமாக வந்த கடற்படையினர், இவர்களை மறித்து விசாரித்துவிட்டு அவர்களின் மீன்பிடி உபகரணங்களை எடுத்து கடலில் வீசினர். அத்துடன், மீனவர்கள் மீதும் தாக்குதல் நடத்தினர்.

இதையடுத்து கரை திரும்பிய மீனவர்கள் இது சம்பந்தமாக கடற்புலிகளின் வடமராட்சி அரசியற்துறைக்கு அறிவித்துள்ளனர். (17)

## அனைத்துப்பீட மாணவர் கூட்டம்

யாழ்.பல்கலைக்கழக அனைத்துப்பீட மாணவர்களுக்குமான பொதுக்கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை மதியம் 12 மணிக்கு நடைபெறவுள்ளதால் அனைத்துப் பீட மாணவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது.

## வவுனியா...

போது ஏனைய அதிரடிப்படையினரால் தாக்கப்பட்டனர். சத்தம் கேட்டு அயலவர்கள் கூடியபோது, அதிரடிப்படையினர் அங்கிருந்து தப்பியோடி விட்டனர்.

இதையடுத்து நேற்றுக்காலை குறித்த பெண்ணின் குடும்பத்தினர் விடுதலைப்புலிகளின் அலுவலகத்தில் முறையிட்டனர்.

புலிகளின் அரசியற்துறையினர் கண்காணிப்புக்குழுவிற்கு அறிவித்ததையடுத்து, நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் கண்காணிப்புக்குழுவின் அலுவலகத்தில் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் வில்பிரட் மகாநாயக்க மற்றும் புலிகளின் வவுனியா அரசியற்துறைப பொறுப்பாளர் எழிலன் ஆகியோர் கலந்துகொண்ட இக்கூட்டத்தில், சம்பந்தப்பட்ட படையினர் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என புலிகள் வலியுறுத்தினர்.

சம்பந்தப்பட்ட ஐந்து விசேட அதிரடிப்படையினரையும் கைதுசெய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அல்பிரட் மகாநாயக்க இக்கூட்டத்தில் தெரிவித்தார்.

## போர் பாதித்த...

நம்பிக்கை தெரிவித்துள்ளனா.

கடந்த வாரம் கிளிநொச்சியில் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை யுனிசெப்பின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ரெட்காவன் சந்தித்துப் பேசிய போதே, இரு தரப்பும் இணைந்து சிறுவர் நலன் திட்டங்களை முன்னெடுப்பது குறித்து முடிவு செய்யப்பட்டதாக யுனிசெப் உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளது.

அத்துடன், இந்தச்சந்திப்பு மிகவும் ஆக்கபூர்வமானதாக அமைந்திருந்ததாகவும், நல்ல விளைவுகளை தரக்கூடியதாக அமைந்திருந்ததாகவும் யுனிசெப்பின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

## புலிகள் சிறார்...

சிறுவர்களைக் கடத்திச் செல்லும் நடவடிக்கையில் ஈடுபடுவோரைத் தராதரம் பார்க்காது சட்டத்தின் முன் நிறுத்துமாறும் ஜனாதிபதி சந்திரிகா இராணுவ, பொலிஸ் அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

கடந்த காலங்களில் சிறுவர்கள் கடத்திச்செல்லப்பட்ட சம்பவங்கள் தொடர்பாகக் கிடைத்த முறைப்பாடுகளைக் கவனத்திற்கொண்டு இந்தத் தீர்மானத்தை ஜனாதிபதி எடுத்திருப்பதாகவும் ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

இதுசம்பந்தமாக ஒரு வார காலததுக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு இராணுவத்தினருக்கும் பொலிஸாருக்கும் ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

## செய்திகள் உண்மை...

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

குறிப்பிட்ட பத்திரிகை வெளியிட்ட வாசகர் கடிதத்தில் குறிப்பிட்டது போன்று யாழ்.மாவட்ட அரசியற்துறைக்கு குறிப்பிட்ட கடிதத்தின் பிரதி இதுவரை கிடைக்கப் பெறவில்லை. ஆயினும், சமூகப் பொறுப்புள்ளவர்கள் கவனத்தில் எடுக்கவேண்டும் என்ற பத்திரிகையின் நோக்கத்திற்கு அமைவாக, நாம் இது தொடர்பாக ஆராய்ந்து அறிந்த வகையில் இச்சம்பவம் நடைபெற்றது என்பதை உறுதிப் படுத்த முடியவில்லை.

பல்கலைக்கழக மாணவர்கள் பகிடிவதை புரிவதை எந்தவொரு சமூகநலன் விரும்பியும் ஏற்றுக்கொள்ள மாட்டார். இந்த வகையில் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமும் நிர்வாகமும் பகிடிவதைக்கெதிராக தீர்மானத்தை வெளியிட்டு துணிவுடன் நடவடிக்கை எடுக்க முன்நிற்பது, முற்போக்கான, ஆரோக்கியமான, முன்னுதாரணமான செயற்பாடாகும். அதேநேரம், சமூக அநீதி நடைபெறும்போது, அதனை தட்டிக் கேட்கும் உரிமை பத்திரிகைகளுக்கும் சமூக அக்கறை கொண்ட அனைவருக்கும் உள்ள கடமையும் உரிமையும் ஆகும்.

இதேவேளை -

பத்திரிகைகள் அதன் உண்மைத் தன்மைகளை சந்தேகத்திற்கிடமின்றி உறுதிசெய்துகொள்வதும் ஆதாரப்படுத்தக் கூடியதாக வெளிப்படுத்துவதும் எதிர்காலத்தில் முரண்பாடுகளைத் தவிர்த் துக்கொள்வதற்கும், சமூக அநீதிகளைக் கட்டுப்படுத்துவதற்கும் சாலப் பொருத்தமானதாக அமையும் என நாம் கருதுகிறோம்.

சமூக அநீதிகளை நாம் கண்மூடி மௌனிகளாக நின்று அனுமதிக்கப் போவதில்லை. அவற்றை எமது சமூகத்தில் இருந்து விரட்டியடிக்க நடைமுறைச்சாத்தியமான செயற்திறன் மிக்க கலந்துரையாடல்களையும், கருத்துப்பரிமாற்றங்களையும் மேற்கொண்டு பிரச்சினைகளை எதிர்காலத்தில் தீர்க்க முனைவது ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

தமிழினம் பெரும் விலை கொடுத்து தனது விடுதலைப் பயணத்தில் வீச்சுடனும் உறுதியுடனும் நிதானமாக முன்னேறி வரும் இச்சூழலில், அனைவரும் ஒன்றுபட்டு எமது தேசத்தினதும் எமது இனத்தினதும் எதிர்காலத்தினை தீர்மானிக்கும் விடுதலைப் பயணத்தில் இணைந்து பலம் சேர்க்க வேண்டும். அதேநேரம், நாம் அனைவரும் ஒன்றிணைந்து நிற்கவேண்டிய இக்கட்டத்தில், எமது இனத்தினைப் பலவீனப்படுத்த முனையும், பிரித்தாளும் தந்திரோபாய உத்திகளைக் கொண்டிருக்கும் சக்திகளுக்கு இடமகொடாமல், சமூகநீதியும் மனித நேயமும் கொண்ட சமூகத்தினை உருவாக்கும் பணியில் ஒன்றிணைந்து செயற்படுவோம் எனக் கேட்டுக்கொள்கின்றோம்.

- இவ்வாறு யாழ்.மாவட்ட அரசியற்துறை வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது.

நமது ஈழநாடு வழங்கும்
உலகக் கிண்ண கிரிக்கெட் - 2003
MEGA பரிசுப் போட்டி
முதற்பரிசு - 25,000
வழங்குவோர்: இரத்தின கோபால்ஸ் கூட்டு நிறுவனங்கள்
இரத்தினம்ஸ்
30, சிறாம்பியடி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
அசோசியேட்டர் மோட்டார் வெயிக்கிள் (AMW), அங்கீகரிக்கப்பட்ட யமஃகா மோட்டார் சைக்கிள், வெளி இணைப்பு இயந்திரங்களின் யாழ். விற்பனை முகவர்.
இரண்டாம் பரிசு - 15,000
மூன்றாம் பரிசு - 10,000
வழங்குவோர்: சந்தியா மல்ரி கோட்யாட்
531, பருத்தித்துறை வீதி, நல்லூர்,
பிரதான வீதி, பண்டத்தரிப்பு
Fancy goods, gift items, fevicryl & acron paint items
இன்னும் ஏராளமான ஆறுதல் பரிசுகள்
வினாக்கொத்துக்கு விடைதந்து
பரிசுகளை அள்ளிச் செல்லுங்கள்!
இன்னும் ஒருசில தினங்களில் முழுவிபரம்!!

## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:-

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.53 | 96.96 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 157.37 | 158.75 |
| 1 யூரோ | 104.23 | 105.41 |
| 1 சுவிஸ் பிராங் | 70.93 | 72.67 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 66.90 | 567.90 |
| 1 ஜப்பானிய யென் | 00.81 | 00.82 |
| 1 சவூதி றியால் | 25.82 | 25.82 |

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 28.01.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.